# இறைமைந்தர்

# பிள்ளைத்தமிழ்

'வரகூர், செந்தமிழ்க்கலைமணி'

**க. அருணகிரிநாதன்**

இயற்றியது.

சிதம்பரம்

சுவிசேஷ மன்ற வெளியீடு.

1985

இறைமைந்தர்

# பிள்ளைத் தமிழ்

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்;
உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்;
உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்;
உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும்,
துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும்
ஜெபம் பண்ணுங்கள்"

மத்தேயு 5 : 44

வரகூர், 'செந்தமிழ்க்கலைமணி'
க. அருணகிரிநாதன்
இயற்றியது.

சிதம்பரம்
சுவிசேஷ மன்ற வெளியீடு
1985

அச்சிட்டோர் :

சபாநாயகம் பிரிண்டர்ஸ், சிதம்பரம்.

# ஆக்கியோன் முன்னுரை

ஆண்டவராகிய கர்த்தர் இயேசு கிறிஸ்து நாதர் அன்றும் இன்றும் உலக மக்களுக்காக ஆற்றிவரும் அற்புதங்கள் அளப்பரியன. அப்பெருமானுர் அன்பின் திருச்செயலை நினைந்து நினைந்து இயற்றப் பெற்றதே 'இறைமைந்தர் பிள்ளைத் தமிழ்' என்னும் இந்நூல். ஆண்டவரும் மீட்பரும் ஆகிய கர்த்தர் இயேசு கிறிஸ்துப் பெருமானுரின் திருவடிக்கமலங்களுக்கு அடியேனையும், இந்நூலையும் உரிய காணிக்கையாக்குகிறேன்.

கர்த்தரின் சுவிசேடச் செய்திகளை அன்பு கனிந்தறிவித்து, இந்நூலுக்கொரு 'முன்னுரை' யளித்த ஊழியர், சகோதரர் J. சைமன் அவர்களுக்கும், 'வாழ்த்துப் பதிகம்' அளித்த மதுரைப் பேராசிரியர், தமிழ்மாமணி மு. இராமகிருட்டிணனுர் அவர்களுக்கும், அழகுற அச்சிற் பதித்த 'சபாநாயகம்' அச்சகத்தார்க்கும், இந்நூல் வெளிவரப் பெரிதும் விரும்பிய சகோதர சகோதரிகளுக்கும் உரிய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லையில்லாத திரியேகதேவனின் திருவருள் இந்நூலைப்பயிலும் அனைவரிடத்தும் அமைவதாக, துதி கன மகிமை யனைத்தும் திருத்தந்தையார்க்கும், இறைமகனுர் இயேசு கிறிஸ்துப்பெருமானுருக்கும், பரிசுத்த ஆவியருக்கும் என்றென்றும் நிறைவதாக ஆமென்

இங்ஙனம்,

**க. அருணகிரி,**

வரகூர்.

# அருஞ்சொற் பொருள்

கரிசு—பாவம். குறுக்கை—சிலுவை. குருதி—இரத்தம். நிரையம்—நரகம். குரவர்—ஆச்சாரியர். ககனம்—ஆகாயம். திரித்துவம்—தந்தையர், மைந்தர், ஆவியர். ஏகத்துவம்—ஓரிறை. எழுசுரத்தின்னிசை—சரிகமபதநி எனும் எழுசுரங்களால் ஆகும் இசை. இசைய—பொருந்த. உழி—இடம். உஞற்றல்—செய்தல். இடையர்—ஆடு, மாடு மேய்ப்பவர்; குறிஞ்சி நிலத்துக்கும், மருத நிலத்துக்கும் நடுவிலுள்ள முல்லை நிலத்தில் வசிப்பவர் ஆதலின் இடையர் எனப் பெற்றனர். புன்முறுவல்—இளஞ்சிரிப்பு. சூனியம்—வெறுமை. கையுறை—பரிசுப்பொருள். இளங்குதலை—மழலைச்சொல்; மொழி நிரம்பப் பெறாத இனிய குழந்தையின் மழலைச் சொல்; குதலை—மழலை. கற்பணி காரிகைமேரி—கற்பை அணிகலனாக அணிந்த மரியன்னை. வாடை—வடக்கிலிருந்து வீசும் குளிர்க்காற்று: மார்கழியில் வீசும் காற்று. கையுறை—பரிசுப்பொருள். யாக்கை—உடம்பு. வியாபாகம்—எங்கும் நிறைவு. உம்மை விலகும் மரணுதியினில்—ஆன்மா இறைவனுக்குக் கீழ்ப்படியாமல் அவரில் விலகுவதே மரணம் என்பது. மன மாதியினுற் புரிதீவினை—மனம், வாக்கு, உடலாற் புரி பாவம். சிவணும்—பொருந்தும். குருத்துவம்—ஆசாரியத் தன்மை. குருந்து—குழந்தை நறவு பிலிற்றும்—தேன் சிந்தும். செங்கேழ்—சிவந்தநிறம். சிறுவல்—குழந்தை.

உதிரம் முதலா எழுதாது ஆம் உடல் = 1. தோல், 2. இரத்தம், 3. இறைச்சி, 4. மேதை, 5. எலும்பு, 6. மூளை, 7. சுவேதநீர். இவ்வெழு தாதுக்களால் ஆகியதே மானிட உடம்பு.

செடகர்—அடியவர்; செடகன்—அடிமை.

சிரறுதல்—கோபித்தல். குமுதவீ—குமுதமலர்: வீ—மலர், உடு—விண்மீன். அவ்வை—யோவாள். நசயேயச் செல்வம்—நாசரேத் ஊரின் ஆண்டவர். பெத்தலே—பெத்லகேம்.

# வாழ்த்துப் பதிகம்

தமிழ்மாமணி,

**பேராசிரியர், மு. பவுல் இராமகிருட்டிணன்,**
M.A., B.T

**மதுரை.**

பிள்ளைப்பெருமான் இயேசடிகள் பெருமையனைத்தும் பேசுதற்கிப்
பிறவிநாட்கள் போதாவாம் பின்னு மெஞ்சும் அவர்புகழே
வெள்ளத்தனைய மன்பதையின் வெருவுதீய வினைப்பயனை
வெறுக்கையின்றிக் குறுக்கையினில் சுமந்துதீர்த்த வித்தகரை
உள்ளத்தெழுந்த வேட்கையினால் உருகிப்பாடத தீந்தமிழில்
பிள்ளைத்தமிழைத் தேர்ந்தெடுத்துப் பிறங்கவைத்த நற்றமிழர்
தில்லைமூதூர் அடியவராம் அருணகிரியைத் திருமகனார்
எல்லையில்லாப் பேரரசில் இசைத்தமைக்கு வாழ்த்துகிறேன் 1

இறைமகனார் இயேசுபெம்மான் என்னனைய இழிஞனையும்
இரக்கமொன்றே முன்னிலையாய் ஏற்றெடுத்தார் என்சொல்வேன்
மறைபொருளாய் இருந்துமண வாட்டியினை மண்ணுலகில்
மணவாள ராகவந்து களவணைந்து வானிவர்ந்தார்
குறையிரந்து மயங்கற்க கடிமணநாள் அணித்தாகும்
குவலயத்தின் அடியரெலாம் அவலமின்றி அணைந்துநிற்பார்
பறையறைந்து மாக்களெலாம் மனந்திரும்ப அழைத்திடுமின்
பகவனருள அருணகிரிக் கிசைந்தவா றியம்புமினே. 2

அய்ம்பதாண் டகவைவரை அவலநெறி கடைப்பிடித்தும்
அல்லழிய மாட்டாமல் அல்லலுற்ற நெஞ்சினராய்ப்
பைம்புதரை யெரிக்காமல் அதனடுவே பெருநெருப்பாய்ப்
பண்டுமுனி மோசையனுக் கருள்புரிந்த பகவனைத்தாம்

செம்பொனகர் வேந்தர்க்குத் திருமகனார் எனநம்பச்
செய்யவொளி ஆவியரால் உள்ளுணர்த்த மனநெகிழ்ந்து
வம்பெனநீத் துழலாமல் வாழ்வுநெறி கடைப்பிடிக்கும்
தெம்புடைய அருணகிரி திருத்தமிழ்நூல் தழைக்கவே. 3

உற்றாரை உறவினரைக் கற்றாரைக் கலைமணியை
மற்றாரைப் பணிந்துலவும் பண்புடைய நல்லடியார்
பெற்றாரின் பெரிதிரங்கிப் பெரும்பாவப் பேய்த்தளையைச்
செற்றாரைச் செகுத்தெழுந்த செம்மலையே நெஞ்சகத்து
உற்றாரின் மேலவராய் உண்மையொடும் ஆவியொடும்
உவந்தேத்தித் தொழுதுவரும் தொழும்பரிடைத்
தமைத்தாழ்த்தி
நற்றும ரைசார்ந்த நல்லன்னம் அன்னமனம்
பெற்றாராம் அருணகிரி பிள்ளைத்தமிழ் வாழியவே. 4

உலைவின்றி இன்றுவரை ஒருமனமாய் வழிவழியாய்
ஒருங்கிணைந்து சென்றநெறி ஒவ்வாமல் இல்லாளர்
மலைவின்றி மாற்றுநெறி பற்றினரால் மனமுடைந்த
மனைமக்கள் தம்முளத்தில் மறைமுதல்வர் பேசுகவே
கொலைமறுத்துக் கொலையேற்று கொற்றவரே தம்க்காகக்
குறுக்கையினில் குருதிசிந்தி குற்றமெலாம் தாமேற்றார்
அலைவின்றி வந்திடுக ஆறுதலோ டன்பமைதி
அணவிடுவீர் அருள்பொங்கும் அருணகிரி தமிழ்வாழ்க. 5

பேரின்பப் பெருவாழ்வு பெறவிழையும் பெற்றியரே
பிள்ளையைப்போல் ஆகுகநீர் பேரன்பிற் பேதமின்றி
சேரின்னல் பறந்தேகும என்றறைந்த இயேசுவின்மேல்
செந்தமிழில் பிள்ளைத்தமிழ் செப்புவதும் சிறப்பன்றோ
கூரன்ன கடுஞ்சொல்லும் கடுவெனக் கைத்துவிடும்
கூராணி யடித்தவர்க்கும் கொற்றவர் மன்றாடினர்காண்
நாரின்மை சிறிதுமில்லா நல்லடியார் திருத்தொழும்பில்
நயந்தொழுகும் அருணகிரி நற்றமிழ்நூல் வாழியவே. 6

உலகெலாம் வென்றொருவன் உயர்தனிச்செங் கோலோச்சி
ஓங்கிய புகழ்பெற்றும் உயிர்நலம் பேணாகில்

இலகொளி வேந்தரேோர்நாள் இம்மையிற் செய்தவெல்லாம்
எடுத்து வினவிடுங்கால் ஏங்கிமற் றென்னுரைப்பான்
அலகிலார் இயேசுவாழ்ந்த அன்புநெறி யறிவறிந்து
அயர்விலா திடுக்கத்தில் நடப்பவன் அரசாள்வான்
விலகினர் என்றுசொல்லி விசும்பறக அடியாரை
அலகையை வென்றெழு அருணகிரி தமிழ்வாழ்க. 7

தந்தைதூ யாவியும் தக்கநல் லாபிரகாம்
தரணியில் வாழ்ந்தபிற சமூவேலாம் முதியர்வரை
எந்தையாம் நெய்ம்முடியை காக்கவென் றோதிய
இசைவினைக் கண்ணுற்றேன் வியப்புற்றேன் பெருமானே
முந்தநீ சொன்னவற்றை முறியாமல் கீழ்ப்படிதல்
மும்முர சார்த்துநிற்கும் இறையரசைக் காப்பதாம்
இந்தக் கருத்துடனே காப்புப்ப ருவத்தையான்
களித்தனன் அருணகிரி அழகுதமிழ் வாழ்கவே. 8

யானென தென்னுந்திய அகந்தையைப் பற்றினை
அகற்றவே தாழ்மையின் மூலிகை தந்தருள்
கோனிவண் குழந்தையாய்ச் செங்கிரை யாடுகின்றார்
குலமைந்தர் தாலேலோ கொற்றவா தாலேலோ
வானின் றிறங்கிவந்து வள்ளலார் அடியாரின்
பாடலுக் கிருகைதட்டி பயனென்றும் நுகர்கின்றார்
தேனெனும் மொழியாரின் திருமுகம் முத்தஞ்செய்ய
தீராத ஆசைகொள்ளும் அருணகிரி வாழியவே. 9

வருகென நிலவினை அழைத்திள வரசுடன்
வளமிகு சிற்றிலும் சிறுபறையும் ஆடுதறகு
பருவங்கள் பத்தமைத்து பண்ணொடு பாணியும்
பயின்றிடப் பிள்ளைத்தமிழ் பாடிய புலவரை
உருவ வணக்கமெனும் பருவரல் தனைநீத்து
உயிருள்ள இறைவரை இயேசுவைத் தம்மகத்தில்
வருகென அழைத்தவண் ஆசனம் அமைத்தநம்
அருணகிரி வழிவழித் தொண்டாற்றி வாழியவே. 10

சகோதரர், ஊழியர்,

## J. சைமன் அவர்கள்

சுவிசேஷமன்றம்,

**சிதம்பரம்.**

*"கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்" (சங்: 98: 1.)*

*"நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்"*

*(கொலோ 3; 17.)*

# முன்னுரை

தமிழகத்தில் வழங்கிவரும் இலக்கியங்கள் யாவும் பேரிலக்கியங்கள சிற்றிலக்கியங்கள் என இருவகையில் அடங்கும். சிற்றிலக்கியங்களை 96 வகைப்படுத்தி அளவில்லாத இலக்கியங்களை இடைக்காலத்தில் தோன்றிய புலவர் பெருமக்கள் தோற்றுவித்தனர். இலக்கியம் என்ற சொல் "இலக்கு" (குறிக்கோள்) என்ற வேர்ச்சொல்லைக்கொண்டு திகழ்வது. மனிதர் யாவரும் ஓர் இலக்கினைக்குறித்து நடந்தேற வேண்டும். அவ்வகை வழி செய்வனவே இலக்கியங்கள்.

'இறைமைந்தர் பிள்ளைத்தமிழ்' என்னும் இச்சிற்றிலக்கிய நூல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இலக்காகக் கொணடது. இறைமைந்தரை இலக்காகக் கொண்டு நம்மை அவர்பால் செலுத்தவல்லது என்பதும் பொருந்துவதாகும். இந்நூல் முற்றும் மரபுவழிப் பாடல்களால் அமைந்த சிறப்புடையது. "உணர்வினில் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

என இலக்கணங் கூறு முகத்தானே செய்யுள் இயற்றுவோரது உணர்வைப் பொறுத்தே செய்யுளின் சிறப்பு அமையும். இவ்வாறு சிறப்பமைந்த இந்நூல் கர்த்தரின் மீட்புச் செய்தியைக் குறிக்குஞ் சிறப்புடையது.

கிறிஸ்து நெய்க்காப்புற்றவர். இறைவராகிய தந்தையின் திருமைந்தர். தந்தையர், தனையர், ஆவியர் என்ற மூன்றுள் தத்துவத்தில் நடுவாளாக விளங்குபவர். மூன்று ஆள் தத்துவம் கூறப்பெறினும் இறைவர் ஒருவரேயென்பது கிறிஸ்தவ இறையியல் திருமறை வெளிப்பாடாகும். 'திரியேகதேவன்' எனும் பெயரும் இதனை வலியுறுத்தும். இவ்வாறு ஏக இறைவனின் தன்மைபெற்ற இம்மூவரும் தோற்றம் முடிவு இல்லாதவராகவும், உயர்வு தாழ்வற்ற சமநிலை யுடையவராகவும் விளங்குவர். இம்மூவரின் ஒரே நோக்கம் மனிதர், கடவுளின் ஐக்கியத்தில் பங்கு பெறவேண்டும் என்பதேயாகும். இவ்வாறு இறைமைந்தராக வுள்ள இயேசு கிறிஸ்து, உலகத்திலுள்ள அனைவரையும் பாவத்திலிருந்து மீட்டு விண்ணுலகத் தந்தையாருடன் இணைக்கவே நிலவுலகத்தில் மனித குமாரராக அவதரித்தார். கர்த்தர் இயேசு அவதரித்த செய்தி முற்றும் நடந்தேறிய ஒரு வரலாறேயாகும். இவ்வாறமைந்த இவ்வரலாற்றுச் செய்தி (சுவிசேஷம்) நற்செய்தியென்று கூறப்பெறும். இவையாவும் இந்நூலில் ஆங்காங்கே சிறப்பான செய்யுள் நடையில் கூறப் பெற்றிருத்தல் கண்டு மகிழலாம்.

'பிள்ளைத்தமிழ்' என்னும் இந்நூலமைப்பு குழந்தைக்குரிய பத்துப்பருவங்களை அமைத்துகொண்டு, பருவம் ஒன்றுக்குப் பத்துப்பாடல்கள் வீதம் நூறு பாடல்களால் கர்த்தரைப் பாட்டுடைத் தலைவராக அமைத்து பாடியதாகும். 101 ஆசிரிய விருத்தங்களினால் இந்நூல் விளங்குகிறது. ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தில் ''குழவிமருங்கினுங் கிழவதாகும், ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப'' எனக் கூறி இருத்தலால் தொல்காப்பியர் காலத்திலேயே குழந்தையைச் சிறப்பித்துப் பாடப் பெற்றிருத்தல் தெளிவாகும்.

இனி இந்நூலின் ஒரு சில பகுதியைக் காணலாம். கிறிஸ்தவ வாழ்க்கை பக்தி, செபம், ஊழியம் மூன்றுற் சிறந்து விளங்கும் என்பதை 11ஆம் பாடலில்

''பக்திசெபம் ஊழியம் மூன்றுற் சிறந்துண்மை — பகர்சாமுவேல்
முதியனே''

எனவும், இறைவனின் குணங்களைப் 16–ஆம்பாடலில்

''நீதி தூய்மை செயல்வலிமை — நேச உயிர்பால் கழிவிரக்கம்
நிலைத்த மகிமை விண்ணுலகின் — நிமலத் தன்மை
யுடையவராய்''

எனவும், இறைவனின் வல்லமையை 15–ஆம் பாடலில்

''ஒரு சொல்லதனுல் அளவிறந்த — உலகம யாவும் சூனியத்தில்
உதிக்கச் செய்தே அவ்வளவில் — உலவச் செய்யும்
அருளரசே''

எனவும், விசுவாசம் திறவுகோலாகி பரம உலகில் செலுத்து வதை 20–ஆம் பாடலில்

''திறவுகோலாம் விசுவாசம் — தேடியளித்தெம் மனம்திருப்பி
திருவார் பரம வுலகிலெமைத் — திகழச் செலுத்தும்
அருண்மதலாய்''

எனவும், கர்த்தரின் குழந்தைப்பருவ அழகை

''குலவிக் கொஞ்சும் மரியன்னை — குளிர்மென் கரத்தில்
தவழ்ந்தினிய
கோலங் காட்டும் அழகுருவே''

''உரத்தினில் அளியன்பு தேங்கவுங் கண்களில்
உயிரிரக்கம் மிளிரவும்''

''கொஞ்சிடும் அழகின் திருவுரு மதலாய்''

''நறுமணங் கமழ்கின்ற இளந்தளிர் உருவமே''

எனக் கூறியிருத்தல் காணலாம். மழலைப்பேச்சு இனிப்பதை

''இலகுஞ் சுவையா ரிளங்குதலை—இயற்றியெங்கள் செவிப்புலமும்
எண்ணும் நெஞ்சும் யாவற்றும் — இனிக்கச் செய்யும்
இளமதலாய்''

''தெள்ளிய தேன்பாற் சுவைபொழி மதலாய்''

''கண்டை நிகர்த்த கனிமென் மொழியால்''

என வருவன கண்டு மகிழலாம். கர்த்தரின் சிரிப்பு அழகினை

''மருவின் உருவின் ஒளிகாலும் — மதியம்போன்ற திருமுகத்தில்
மலரும் 'முறுவல்' எழில்ததும்பும் — மணியே''

''மேவிய தாமரை நாண்மலர் போன்றொளிர்
மின்னும் எழின்முகத்தில்
மெல்லிய புன்னகை பூத்தொளிர் தூயவ''

என வருவன காணலாம்.

மனுமக்கள் பாவங்கள் நினைவாலும், ஐங்கருவிகளினாலும், செயலாலும் உண்டாகும் என்பதை

''நெஞ்சினிற் பிறரின் பொருள்களை யென்றும் — நினையுங்
களவுகளும்
நீணிலமாந்தர் பிறர்கெட வெண்ணும் — நெடிய
கொலைத்தொழிலும்
வஞ்சியர் தம்மை நசையுடன் நோக்கும் — வளர்விப சாரமதும்
வையகந் தன்னிற் பொறிகளாற் செயலால் — வாய்த்த
வினைப்பாவம்''

எனவும், பாவமாகிய தளையில் எங்களை மீட்டுக் கொள்வதற்காக எங்கும் நிறைந்த வியாபகத் தன்மையுடைய இறைமைந்தர் ஐம்பொறியால் ஆகிய உடலாகிய தளையைத் தாமே மேற் கொண்டு பரிசுத்தராகவே அவதரித்தார் என்பதை 20-ஆம் பாடலில்

''பாவியர் எம்தளை நீக்கிட வேண்டியிப்
— பாலில எமைப்போன்றே
பரவிய ஐம்பொறியாக்கையில் வன்றளைப்
— பட்டீர் வியாபகமே''

எனவும், சமயப் பிணக்கரைக் கூறுவதாக 54-ஆம் பாடல்

''எண்ணார் சமய வாதிகளால் — இலகுங் கலகத் திருண்மயக்கத்
திருளிற்சேரா தெமையெடுத்தே
— இலகுஞ் ஞானவொளியுதவும் அண்ணல்''

கர்த்தர் இயேசுவின் போதனை, சமயவாதிகளின் பொருண்மயக்கம் எனும் இருளை நீக்கி ஞானவொளி யுதவுந் தன்மையுடையது. சமய பேதங்கடந்து பொதுவாக உலகமக்கள் அனைவருக்கும் மீட்பளிக்குந்தன்மை வாய்ந்தது எனுங்கருத்தை நோக்கத் தக்க தொன்றும்.

41–ஆம் பாடலில்

''வீரம் எனலேம் புலனடக்கம் — விளக்கி யவ்வா றொழுகியவா''

''வெற்றிக்குரிய வீரம் என்ப — விளங்கும் புலனைந்தும்
வெல்லல் எனவே உரைத்தே ஒழுகும்—மெய்மை தெரித்தருளக்
குற்றம் மலிந்த வுலகில் வந்தே — கொடியோர் நிந்தையெலாம்
குணத்தாற் பொறுத்து மீட்பை அளிக்கும்
— குளிர்மா மதியனையாய்''

எனக்கூறியிருத்தல் கருதத்தக்கது. சாத்தானின் கொடுஞ்செயல் கூறுவதாக 80–வது பாடல்

''கூர்த்த மதியால் உலகினரைக் — கொடிய செயற்கேயுள்ளாக்கி
குவலயத்தின் பொருள்களையே
— குறித்தைம் புலனுக்கிரையூட்டி
ஆர்த்த வாறே மனுக்குலத்தை
— அடிமைப் படுத்தி வீழ்த்தியென்றும்
அரசு புரிவல் எனவன்மம்
— அறைந்த வஞ்சப் பேய்ச் செயல்''

எனும் பாடலில் சாத்தான் கூரிய அறிவாளனாக விளங்குவதையும், மக்களின் ஐம்பொறிகளுக்கான உணவாக உலகப் பொருள்களை ஊட்டுதலையும், ஆரவாரித்து மனுக்குலத்தைத் தனக்கு அடிமைப் படுத்தி வீழ்த்தி அரசு புரிவேன் என வஞ்சச் சூளுரைத்து மனு மக்களை வஞ்சகத்தில் ஆழ்த்துதலையும் கூறப்பெறுதல் காணலாம்.

''குழுமிய மண்ணுலகர் யெவரையும் பொய்மையிற்
— கூட்டிவெங்கரிகுள் வீழ்த்திக்
கோனாக வல்லரசு புரிவல் எனும் மேட்டிமைக் குனுங்குபேய்....

எனக் கூறி இருத்தலுங் காணலாம்.

அம்புலிப் பருவத்தில் கர்த்தர் அழைப்புக் கொடுத்தும் வாராதிருக்கும் அம்புலியை நோக்கிக் கூறுவதாகவுள்ள பாடல்

''வருகமகிழ் வெய்தலாம் எனவுன்னை அழைக்கவும்
வரக்காலந் தாழ்ப்ப தென்னே!

''காசியினில் வந்தஎம் இறைமைந்தர் உன்றனைக்
கருதிவா வெனவழைத்தும்
அநியாய மாகவே வாராதிருப்பதென்!

''அன்புசேர் இறையுலகை அமைக்கின்ற கர்த்தருடன்
அம்புலீ ஆடவாவே''

''ஆற்றுப் படுத்திடுேம் எம்மிறை இளவலுடன்
அம்புலீ ஆடவாவே''

எனவும், கர்த்தர் அனைத்து வல்லமையுடையவர்! ஆதலின் உன்னை வரவழைத்து அவர் காலடியில வீழ்த்துதல் அரிதன்று. இரக்கம் உடையவராக இரட்சிக்க வந்தவர் ஆதலின் தண்டம் புரிந்திலர். ஆதலின் நீயே வந்து விடுவாய் என அழைக்கும் பாடல் சிறப்புடைத்து.

''காற்றையுங் கடலையும் அதட்டிப் பணித்தவர்
— கடிந்துனை வரச் செய்துமே
கமலமலர்க் காலடியில் வீழ்த்துதல் அரியதோ
— கருணைமிகும் இரக்க மதனைப்
போற்றுமுறை வந்தவர் ஆதலின் அச்செயல்
— புரிந்திலர் இதையுணர்ந்தே
புண்ணியப் பரிசுத்தர் அழைக்கின்ற குரல்கேட்டு
— புறப்பட்டுக் கடுக வருவாய்''

என வுலகரை அழைப்பது போன்று கூறப் பெறுதல் காணலாம்.

விசுவாசம் உடையவர்க்கே 'திருமுழுக்கு' அளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, அவ்விசுவாசத்தில் வேரூன்றி வலுப் பெற்றிட 'திருப்பந்தி' யைக் கர்த்தர் அமைத்ததாக (சாக்கிரமெந்து) கூறப் பெறுதல் காணலாம்

''வளர் விசுவாசம் உடையவர் தமக்கே — வழங்குந்திருமுழுக்கு
வாய்ந்திடச் செய்தே அதனிலெந்நாளும்
— வலுப்பெற்றிட வேண்டி
வளமுறு கர்த்தர் பந்தியை அமைத்தாய்''

என 39 ஆம் பாடலிற் கூறி, சபையாகிய உடலுக்குக் கர்த்தர் தலையாகி இயக்கி வருகிறார் என்பதை

''தலையென சபையின் உடலமியக்கும் — தகைசே ரருளாளா''

எனக் கூறியிருத்தல் காணலாம். திருச்சபையைக் கூறுமிடத்து,

''மலிந்த இருட்படலம்
நண்ணு வகையில் வேதத் தெளிவாம் — ஞானச் சுடர்பரப்பும்
நனிசேர் சபையைத் தோற்றி யெம்மை
— நாடும் படிவைத்தாய்''

''வித்தகத் திருமறை வசனமாம் உணவினை
— வேளை தேர்ந்தெமக் கருத்தி
விசுவாச திருச்சபை சேர்த்தருள் இளவலே''

''சாற்றுந் தூய ஆவிநிறைத்தே — சபையிற் சார்ந்தொழுக
ஆதல் புரிந்து மீட்பை அளிக்கும் அரசே''

எனக் கூறியிருத்தல் காணலாம்.

உடலும் உயிரும் இணைவே மனிதன். இதைப்போன்றே மனித குமாரரும், தேவகுமாரரும் இணைவே கர்த்தர். தாம் அடைந்த பாடுகளின் மூலமாக மனித குமாரனின் தன்மையையும், தாம் புரிந்த அற்புத அடையாளங்களின் மூலமாகத் தேவ குமாரனின் தன்மையையும் விளங்கப் பண்ணினார்.

''உடல் மனுமைந்தரும் உயிர் இறை மைந்தரும்
உடன் இணைந் தொருவராகி
உலகினிலுதித் தென்றும் இரட்சணியம் புதுக்கிடும்
ஒப்பிலா இன்ப நிறைவே''

எனவும், கர்த்தர் நன்மேய்ப்பராகித் தமது பிள்ளைகளாகிய மந்தையை எவ்வாறு பாதுகாக்கிறாரென்பதை,

"மந்தையாம் எங்களை நன்மேய்ப்ப ராகியே
— மலிந்தபுல் லதனில் மேய்த்தும்
மடுநீரருத்தியும் சீவதரு நீழலில் — மன்னவைக் கின்றகோவே"

இவ்வாறு பலவிடத்தும் கர்த்தரின் சிறப்புகளும், மீட்பின் செய்திகளும் சிறப்பான இலக்கிய நடையில் இந்நூல் முழுவதும் காணலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்நூலை இயற்றியவர், சிதம்பரம் வரகூர், செந்தமிழ்க் கலைமணி, க. அருணகிரிநாதன் ஆவார். சிதம்பரம் சுவிசேஷ மன்றத்தைச் சார்ந்தவர். தமது 50ஆம் வயதில் கர்த்தர் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்று திருமுழுக்குப் பெற்றவர். பரிசுத்தாவியரின் நிறைவால் மற்றும்பல இலக்கிய நூல்கள் செய்து கர்த்தருக்கு மகிமை சேர்ப்பாராக. இந்நூலைக் கற்கும் அனைவரிடத்தும் கர்த்தர் தமது அன்பைப் பொழிந்தருள்வாராக. ஆண்டவரும் மீட்பரும் ஆகிய கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் இனிய திருநாமத்தினாலே விண்ணுலகத்தந்தை யாவர்க்கும் நலம்பயக்குவராக. துதி, கனம், மகிமை யாவும் தந்தையருக்கும், திருமைந்தருக்கும், பரிசுத்த ஆவியருக்கும் இன்றும் என்றும் அமைவதாக, ஆமென்.

சுவிசேஷ மன்றம், | சகோதரர் ஊழியர்,
**சிதம்பரம்.** | **J. சைமன் அவர்கள்**

இறைமைந்தர்

# பிள்ளைத்தமிழ்

"கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்" (சங். 98:1)

"நான்பாடும்போது என் உதடுகளும், நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும், கெம்பீரித்து மகிழும்" (சங் 71:23).

"சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன்பாடி பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்
(கொலோசெயர் 3:16–17).

"கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்"
(ஏசாயா 35:10).

## 1. காப்புப் பருவம்

### 1. தந்தையர்

ஆதியின் தந்தையாய்த் திரித்துவத் தொருவராய்
ஆகியே பேரன்பினால்
ஆங்காலங் கடந்ததாம் நாளாறில் மண்ணுலகும்
ஆருயிரும் படைத்தளித்து

நீதியுடன் வாஞ்சிக்கும் மக்களினம் என்றென்றும்
நித்யவிண் ணுலகுபெறவே
நிலைநிறீஇ மாறுபடும் தீயரைத் தண்டிக்க
நிரையமும் வைத்தவிறையே!

சாதிகுலங் கோத்திரம் உயர்வுதாழ் வென்னவே
சாதிக்குந் தீயர்நாண
சமரசத் தன்மையால் பாவியரும் உய்திபெற
சாற்றுமறை மெய்க்குரவராய்

மேதினியி லவர்போல ஏழ்மையாங் கோலத்தில்
மிகுந்தஅற் புதவல்லராய்
மேவுநீ ளன்பினால் உலகாள வந்தஇம்
மேதையைக் காத்தருள்கவே.

## 2. பரிசுத்தாவியர்

விண்ணுலகில் மூவரில் ஒருவராய் உலகெலாம்
விதிமுறை உருவாக்கியும்
விமலராம் இரட்சகர் கன்னிமரிக் கருவாக
வேண்டுகா ரணர்ஆகியும்

தண்ணிலவு மனுமைந்தர் திருமுழுக் கேற்றநாள்
தவளவுரு வந்துற்றராய்த்
தனித்தவுப வாசநாள் இறைமைந்தைப் பாலித்த
தகைபரிசுத் தாவியிறையே!

மண்ணிலவு மைந்தரிடம் பிரியமுற் றவராகி
மலிகரிசின் மீட்டெடுத்தே
மாநிலத் திருச்சபையின் சேர்வித்து மறுவுருவம்
மன்னுமா றருள்மீட்பரை

நண்ணுபன் னலமுதவும் மனுமைந்த செல்வரை
ஞானமறை சொற்குரவரை
நற்புனிதம் மேவியொளிர் பரிசுத்த கர்த்தரை
நாளும் புரந்தருள்கவே.

## 3. நேர்வார

இலகுமெய்த் தேவனின் உணர்வினுற் சீவித்தும்
ஏற்றதாம் நீதிநெறியை
இயல்பாக வோதியும் அதன்வழி தான்சென்றும்
இசைந்ததன் குடும்பத்துடன்

நிலவுமிறை வாக்கினுல் பேழைகொண் டந்நாளில்
நிறைமழை வெள்ளந்தனில்
நீணிலத் துயிர்தப்பி நிலத்துளோர் பல்கவே
நிலைத்தநோ வாமுதியனே!

உலகிலுள மக்களினம் உள்ளத்திற் காரிருள்
ஓங்கிய அந்நாளினில்
உயர்நீதி வழுஉவியே பாவத்தி லுழலுநாள்
உற்றமரி மைந்தராகி

கலகமிடு வஞ்சகர் அவமதித் திடவேற்று
கமலமுகம் மலரநின்றே
கரிசுமிகும் மனிதகுலம மீட்புபெற் றிடவருளும்
கர்த்தரைக் காத்தருள்கவே.

## 4. ஆபிரகாம்

இன்னமுத மொழிபயிலும் ஒருமைந்த னுயுள்ள
எழிலுருவன் ஈசாக்கினை
ஏற்றதோர் பலியாக இறைவனுக் களிக்குநாள்
இனியபலி விலக்கிமேலாம்

நன்னரெஞ் சொல்லுக்குக் கீழ்ப்படித லாயுள்ள
நற்செயற் குளமகிழ்ந்தோம்
நாளும்நின் குலம்பெருகும் என்னுமிறை யருள்பெற்ற
நல்லாபிர காமுதியனே!

மன்னுபுகழ் விண்ணுலகின் மகிமைமிகு மெய்த்தேவ
மைந்தரிம் மண்ணுதித்தே
மாறுத நித்தியச் சீவநிலைப் பேரின்பம்
மனிதர்கா ளடைமினென்று

கன்னல்நிகர் மறைவாக்கைக் காசினியர்க் கோதியவர்
கரிசெலாந் தாஞ்சுமந்து
ககனமெய்த் தேவனைக் காண்பிக்கும் பரிசுத்த
கர்த்தரைக் காத்தருள்கவே.

## 5. யோபு

தன்னிகரில் லாதபர தேவனால் விண்ணுலகு
தனினின்று வீழ்ந்தசாத்தான்
தகையோபை வீழ்த்தவெணித் தழைத்தவில் மனைமக்கள்
தாமழிந் தனரென்னவே
என்னையாள் கர்த்தரே யெவரையுந் தந்தவர்
எடுத்துகொண் டோருமவரே
என்னவே நோயுறினும் இறைமீது மாறாத
இயல்யோபு வாழுதியனே!

மன்னவரின் மன்னராய் மூவுலகும் ஆட்சிசெயும்
மறைமுதற் பொருளானவர்
மட்டிலாப் பேரின்ப இறைதிரித் துவத்தினில்
மைந்தரா யுள்ளவவரே
கன்னிமரி தன்னிடம் பரிசுத்தம் மாறாமல்
கருவுற்று குழவியாகிக்
கருணைசே ருருவேற்றிவ் வுலகாள வந்தொளிருங்
கர்த்தரைக் காத்தருள்கவே.

## 6. தானியேல்

அருவமும் மகிமைநிறை யுருவமுங் கொண்டவரை
அழிபொருளில் உருவமைத்தே
ஆற்றுவழி பாடுநிறை பாரசீ கத்திலுள
அரசர்முதல் பலர்தெரியவே
உருமுதலும் ஜீவனும் படைத்தவிறை ஒருவரே
உயர்தந்தை யெனவுணர்த்தி
உன்னதத் தந்தையர்க் காளாகச் செய்திடும்
ஒளிர்தானி யேல்முதியனே!

திருமிகுஞ் சீவியப் புத்தகங் களிலடியர்
சீவிய நலம்வரைந்தே
தெருண்மிகு முறையினுற் றந்தைபாற் பரிந்துரைசெய்
தேவஇறை மைந்தரவரே

சுருகுவெந் தீநரகில் மனிதகுலம் ஆழாமல்
காக்கின்ற பரிசுத்தராய்க்
கருதிதமை யேற்பவர்க் கருள்பொழிய மீட்பராங்
கர்த்தரைக் காத்தருள்கவே.

## 7. மோசே

ஏகஇறைக் கட்டளையை இஸ்ராயேல் மக்களுக்
கியம்பியே வழிநடாத்தி
எகிப்தடிமை நீக்கியும் பசியேக வேமன்ளு
இன்சுவை யுணவளித்தும்

தாகமுறு மன்பதைத் துயர்தீரக் கோலினுல்
தட்டியோ ரோபுமலையில்
தண்ணீரை வரச்செய்தும் இறையுரை யுணர்த்திடுந்
தகைமோசே நன்முதியனே!

நாகவுரு சாத்தானின் வன்றலை நசுக்கவே
நற்புனிதை மரிவயிற்றில்
நாதனிறை, ஆவியர் கிரியையாற் கருவுற்று
நாடுமக வாகிவந்து

மோகமுத லற்றபரி சுத்தராய் விளங்கியே
முன்னிமனம் மாறினேர்க்கே
முடிவிலா விண்ணுலகின் வாழ்வருளுங் கர்த்தராம்
முதல்வரைக் காத்தருள்கவே.

## 8. தாவீது

எழுசுரத் தின்னிசை இறைவனுர் செவித்தடம்
இசையவே இசைமுழக்கி
இறைவரை மகிழ்வித்தும் இறைபற் றுறுதியால்
இராக்கதன் தனைவீழ்த்தியும்

விழுமிய அரசுசெயும் அபிடேகஞ் சாமுவேல்
விரும்பிசெய வேற்றுயர்ந்தும்
விண்ணிறைதன் மைந்தராய் விளங்குபுகழ் தாவீது
வேந்தனும் நன்முதியனே!

'சூழுமிய மண்ணுலகர் எவரையும் பொய்மையிற்
கூட்டிவெங் கரிசுள்வீழ்த்தி
கோணுக வல்லரசு புரிவல்'எனும் மேட்டிமைக்
குணுங்குபேய்த் தலைமிதித்தே

தழுவுதஞ் சிலுவையைச் சுமப்பராய்ப் பாவநிலை
தனையுணர்ந் துளந்திரும்பும்
தன்மையரை விண்ணுலகிற் சேர்விக்கும் மேசியா
தம்மைப் புரந்தருள்கவே.

## 9. சாலமோன்

அண்டமுதல் யாவையும் ஆக்குவித் தருளினல்
அரசுபுரி தந்தையவரை
அடிபணிந் திறைஞ்சியே தனைத்தாழ்த்தி யேத்திடும்
அருங்குணச் செம்மலாகி

மண்டலந் தனைநீதி யரசுபுரி ஞானத்தின்
வரத்திஞல் விளங்கிமேலாம்
மகிமையிறை ஆலயத் தமர்ந்திடப் பணிசெய்த
மதிசால மோன்முதியனே!

எண்டிசை மாந்தர்கள் யாவரும் பாவவுணர்
வெய்தியே மனந்திரும்பி
இரக்கமுள் ளோர்களாய் இறைமக்க ளென்னவே
இலங்குவண மேபுரிந்து

விண்டலத் திறைமுனஞ் சேர்விக்கும் வழியாகி
வேதத்தின் மெய்ப்பொருளினை
விளக்குசற் குருவாகி மூவுலகு மேத்துமொரு
வேந்தரைக் காத்தருள்கவே.

## 10. எலியா

வள்ளலென யாவையும் வழங்கிவரு மிறைவர்க்கு
வையகப் பொருளிலுருவம்
வாய்த்திடச் செய்ததனில் வழிபடல் அடாதென்று
மக்களுக் குணரவைத்தே

உள்ளிமெய்த் தேவனூழி செபஞ்செய்து காலவுணர்
வோங்கிட மழைநிறுத்தி
உற்றதாங் காலத்திற் பொழியவுஞ் செயவல்ல
ஒளிர்எலி யாமுதியனே!

விள்ளரிய மகிமையின் பிதா, மைந்தர் ஆவியரில்
விளங்குநடு வாகும் அவரே
வீழ்கின்ற மனிதரைத் தேடியே யிரட்சிக்க
வியனுலகி லவதரித்து

தெள்ளுமறை கூறுசொல் உண்மையை நிலைநாட்டித்
திரும்பிவரு பாவியோரைத்
திருத்தமுற வேசெய் தெளியமீட் பளித்தென்றும்
திகழ்கர்த்தர் தமைக்காக்கவே.

## 11. சாமுவேல்

தேவனின் செபவாஞ்சை மிக்கோங்கும் அன்னாளின்
திருமைந்த னெனவுதித்து
சீலோவின் இறைவனுக் கெனவன்னாள் தந்திடத்
தேவனின் பணிபுரிந்தும்

பாவவுணர் வெய்தியும் மகிமைமிகு மோரிறைப்
பரமனின் கீழ்ப்படிந்தும்
பக்திசெபம் ஊழியம் மூன்றுற் சிறந்துண்மை
பகர்சாமு வேல்முதியனே!

மூவராய் ஒருவராய் முதலீ றிலாதவர்
முன்னிமனு வாயுதித்தே
முனைப்பற்ற மக்களின் சென்மமுங் கன்மமும்
மொய்த்தபா வங்களைந்து

சீவவழி யாகியே மக்களை நடப்பிக்கும்
தீனகா ருண்யநாதர்
சீர்த்திமிகு வல்லமை மறைத்துலகில் மனிதவுரு
திகழ்கர்த்தர் தமைக்காக்கவே.

# 2. செங்கீரைப் பருவம்

## 12

பறந்தோங்கு விண்தூதர் போற்றியெம் இறைவரெனப்
பண்ணொலி முழக்கியேத்திப்
பரவுமகி மைக்குரிய யாவையும் நீத்திந்த
பாரினிற் கன்னிவித்தாய்

பிறந்தாங் கிடையரும் கீழ்த்திசைக் கலைஞரும்
பேரொளி யுடுவின்மூலம
பெருமைசேர் மன்னுதி மன்னர்பிறந் தாரென்று
பெற்றகை யுறைவழங்கி

நிறந்தோங்கு நும்மெழிற் றிருவுருவை நோக்கியே
நீனுலகின் மன்னரென்றே
நெஞ்சமகிழ் வோங்கவே பணிந்தேத்து முதல்வநும்
நிறையன்பு முறைமையாலே

சிறந்தோங்கும் உலகாள வந்துற்ற செல்வமே
செங்கீரை யாடியருளே
சிவனுமுறை மக்களின் மீட்பருளுங் கர்த்தரே
செங்கீரை யாடியருளே.

## 13

இரட்சகர் இயேசுவின் நாமமல் லாமல்வே —
றில்லையோர் இனியநாமம்
இகத்திரட் சணியத்துக் கெனச்சொலும் வண்ணமே
இயேசுதிரு நாமமேற்றுப்

பரத்துவப் பராபரன் மகிமைமிகு மைந்தரே
பாவியரும் மீட்புபெறவே
பழமையாங் கந்தலுடை பொன்னுடல் தனில்போர்த்து
பரவுவைக் கோல்கிடந்தே

உரத்தினில் அளியன்பு தேங்கவுங் கண்களில்
உயிரிரக் கம்ஒளிரவும்
உன்னதத் தொளிர்தேவ கட்டளை நிறைவேற்ற
உதித்தவா வேதாகமச்

சிரத்தினில் விளங்குமோர் மேலான கர்த்தரே
செங்கீரை யாடியருளே
சிந்துபுன் முறுவலாற் குளிர்விக்குஞ் செல்வமே
செங்கீரை யாடியருளே.

## 14

உய்கின்ற நல்லா றெனல்மனத் தாழ்மையென
உரைத்ததை விளக்கவேண்டி
உம்சீடர் கால்களைக் கரங்களாற் கழுவியே
உஞற்றிடும் செயல்திறத்தாய்

தொய்கின்ற வன்பேய் அடைகின்ற அக்கினித்
துயர்நரகி லெமைவிடாது
தூயாதி தூயராம் தேவனின் பிள்ளையெனுஞ்
சுதந்தரத் துரிமைதந்திர்

பெய்கின்ற அன்புநீர் தனிலெம்மை நனைவித்து
பெரிதெமைக் கழுவியருளும்
பேரின்ப நிதியமே யாரின் றுமைப்போல
பிழைபொறுத் தருளவல்லார்

செய்கின்ற செயலெலாம் முடிவிக்கும் அண்ணலே
செங்கீரை யாடியருளே
சேமித்த வெம்பாவம் மன்னித்த கர்த்தரே
செங்கீரை யாடியருளே.

## 15. வேறு

ஒருசொல் லதனுல் அளவிறந்த
உலகம் யாவும் சூனியத்தில்
உதிக்கச் செய்தே அவ்வளவில்
உலவச் செய்யும் அருள்ரசே

திருவிண் ணுலகின் மெய்த்தூதர்
தேனு ரிசையிற் றேத்தரித்துத்
தினமுந் தினமுந் தாழ்ந்திறைஞ்சத்
திளைக்குந் தேவ திருக்குமரா

மருவின் னுருவின் ஒளிகாலும்
மதியம் போன்ற திருமுகத்தில்
மலரும் முறுவல் எழில்ததும்பும்
மணியே மரியும் யோசேப்பும்

அருகில் விளங்கும் அருட்கொழுந்தே
ஆடி யருளாய் செங்கீரை
அடியேம் உளத்தில் அமரிறையே
ஆடி யருளாய் செங்கீரை.

## 16

நீதி தூய்மை செயல்வலிமை
நேச உயிர்பால் கழிவிரக்கம்
நிலைத்த மகிமை விண்ணுலகின்
நிமலத் தன்மை யுடையவராய்

ஏதம் மிகுந்த மண்ணுலகில்
ஏழ்மைக் கோலங் கொண்டெளியர்
எண்ணும் நிலையில் அவதரித்தே
இலங்கும் ஆவி யுடையவர்க்காம்

தீதில் லாத மறைமொழிந்து
திரும்பும் மாந்தர்க் குளம்மகிழ்ந்தே
திருவார் முழுக்கும் பந்தியையும்
திகழ வைத்த அருளமுதே

ஆதி முடிவும் இலாதவரே
ஆடி யருளாய் செங்கீரை
அன்பால் உலகை ஆளரசே
ஆடி யருளாய் செங்கீரை.

## 17

கொடிய பாவக் கடுஞ்சுரத்திற்
குறிக்கோ ளின்றி நாவற்றிக்
கூடுந் துயராற் கண்செருகிக்
குலையுந் தருணத் தெமக்கிரங்கி

நெடிய தாகந் தீர்ந்திடவே
நிலவுஞ் சீவ நதியின் தண்
ணீரை யருத்திக் குளிர்சோலை
நிழலில் இருத்தித் துயர்களைந்துக்

கடிய கல்லின் எமதிதயங்
கனிவித் தருளும் அருளரசே
கரிய இருளுக் கொளிவிளக்காய்க்
காணும் வண்ணம் நிலம்வந்த

அடியர் இறைஞ்சும் இரட்சகரே
ஆடி யருளாய் செங்கீரை
அருமா மதலைத் திருக்குமரா
ஆடி யருளாய் செங்கீரை.

## 18. வேறு

இம்பரில் மானிடம் மேவின ராயினும்
ஏற்ற குணம்இலராய்
என்னது யானென முப்பகைச் சூழலில்
என்றும் இசைபவராய்

வெம்பிய மாந்தரின் மேட்டிமை நஞ்சறு
வீணர் தமக்காக
வேண்டிய தாழ்மையின் மூலிகை தந்தருள்
விளக்குந் தூயவரே

நம்பிடு வோர்களைத் தேவனின் மைந்தராய்
நணுகு நலம்பலவும்
நல்கியும் ஆவியில் நாளும் வளர்த்திடும்
ஞான அருட்குருவே

அம்புவி யிற்றனு கொண்டொளிர் விண்ணவ
ஆடுக செங்கீரை
ஐயமி லாமறை வாக்கிய நாதரே
ஆடுக செங்கீரை.

## 19

கற்பணி காரிகை மேரியின் உன்னதக்
கருவில் உருவாகிக்
காரிருள் மார்கழிக் கடுங்குளிர் வாடையில்
கால்நடைக் கொட்டிலிடை

நற்சுடர் விண்ணுடு நல்லொளி நல்கிட
நன்னெஞ் சோர்மகிழ்ந்தே
நமக்கருள் செய்திடும் பேரிறை மைந்தரின்
நன்மை வருகையெனப்

பெற்றதம் கையுறை கொண்டு பணிந்திடப்
பிரசம் மலர்முகத்தீர்
பேய்க்குல வஞ்சகம் ஆழ்ந்தவர்க் காகவே
பெரிதும் மீட்பருளும்

அற்புத ஆற்றல் அமைந்தொளிர் கர்த்தரே
ஆடுக செங்கீரை
அன்புசெங் கோலினுல் மூவுல காள்பவ
ஆடுக செங்கீரை.

## 20

பாவியர் எம்தனை நீக்கிட வேண்டியிப்
பாரி லெமைப்போன்றே
பரவிய ஐம்பொறி யாக்கையில் வன்றளைப்
பட்டீர் வியாபகமே

கோவல ராகிய ஏழ்மையர் தங்களைக்
குறித்தீர் பலரும்முன்
கூடிய இன்னிசை பாடியும் ஆடிடக்
குளிர்நோக் கம்புரிவீர்

மேவிய தாமரை நாண்மலர் போன்றொளி
மின்னும் எழில்முகத்தில்
மெல்லிய புன்னகை பூத்தொளிர் தூயவ
மேவி யுமையேற்போா

ஆவியி லென்றும வளர்ந்திடச் செய்பவ
ஆடுக செங்கீரை
அருமறை போற்றும் இறைதிரு மைந்தரே
ஆடுக செங்கீரை.

## 21

கடுங்குளிர் போக்கிட நானில மைந்தர்கள்
காதற் புலத்தில்வில
கண்மணித் தந்தையர் தம்முடற் றழீஇய
கைய ரெனக்கிடக்கப்

படுங்குளிர் நாளினில் விண்ணுல கப்புலம்
பரமன் நலம்விடுத்துப்
பரவிய காசினிக் காவினைப் பட்டியில்
பட்டின் தளிருடலம்

நடுங்கிடத் துன்பு மிகுந்திடத் தாழ்மையை
நாடும் இளமதலாய்
நாளெலாந் தீவினை செய்திடு மக்களை
நலிக்கும் மரணமெனும்

அடுந்துயர் பாற்றிநன் மீட்பருள் வள்ளலே
ஆடுக செங்கீரை
அனைவரின் பாவங் களைந்தொளிர் கர்த்தரே
ஆடுக செங்கீரை.



# 3. தாலப் பருவம்

## 22

கருணா கரவொண் கதிர்மா மதியே
    கருதுந் திருவுருவே
  கனிசே ரிறையே சுவிசே டகமார்
    கனியே ஆரமுதே

அரணா யெமைநேர் வழியில் வரவே
    அழைக்குந் திருக்கரமே
  அடிமை யெனவெங் கரிசுட் கிடந்தே
    ஆழ்ந்தும் மைவிலகும்

மரணா தியினில் எமைமீட் டெடுக்கும்
    மகிமா குணநலமே
  மனமா தியினுற் புரிதீ வினையேன்
    மயலார் உலகர்க்கே

தருணா தருணம் பொழிமா மழையே
    தாலே தாலேலோ
  தயவா யெமையாண் டருள்செய் குருவே
    தாலே தாலேலோ.

## 23

கருவே துமிலா முதலன் னைபிதா
    கனிநச் சியசெயலால்
  கனமா மகிமைக் கடவுள் சினத்தால்
    கருவில் அமைகரிசும்

செருவே தனையார் இழிமா சுடலிற்
    சிவணும் இச்சையினுற்
  சிறியேம் புரியுங் கரிசும் விலகச்
    செயுமாத் தொழிலாளா

அருவே மகிமை நிறைவின் உருவே
அவனி மனிதருக்காய்
அருளுங் கிருபைப் பரிபூ ரணமே
அழகா ரிளமழவே

தருவே தருசீ வியமார் உருவே
தாலே தாலேலோ
தனயர் எமைமீட் டருளும் வழியே
தாலே தாலேலோ.

## 24

மிகையா கியவன் பதனுல், மனிதர்
மெலிவிற் றவிர்ந்திடவே
மிளிருங் குருதி நிணந்தோல் பொதிந்த
மேனி யுருக்கொண்டு

வகையே பொறுமை இரக்கம் கிருபை
வளருங் குணநலங்கள்
மலியும் நிலைகொண் டிடமண் ணுலகில்
வந்தீர் அருள்நிறைவே

சிகையாம் மறையின் முடிபிற் றிகழும்
தேவே மூன்ருென்ரும்
தெருளே இறைவாக் குரைஞா னியர்கள்
தினமும் பரவவருள்

தகைசீ வியநீ ரமுதே சபையின்
தலையே தாலேலோ
தண்மை யளியார்ந் திடுமெய்ப் பரமே
தாலே தாலேலோ.

## 25

கண்டை நிகர்த்தக் கனிமென் மொழியாற்
கழறுந் திருவசனம்
கருத்தைத் திருத்திப் புதுமைப் படுத்துங்
கால மெலாம் நிலவும்

பண்டைச் செயலும் வருகா லத்தின்
பான்மை களையுணர்த்திப்
பருகும் வணமே யெளிதா யுரைத்த
பரமா சற்குருவே

அண்டி யடியோம் உம்சொல் பருகி
அன்பில் நிலைபெறவே
அருளாய் மூன்றில் நடுவா கியவா
அமுதே இறைமதலாய்

மண்டைத் திடலிற் சிலுவை புதுக்கும்
மகிபா தாலேலோ
மாற்றி லுயர்நத பைம்பொற் குவையே
மன்னே தாலேலோ.

## 26. வேறு

திணியார் கருங்கல் நிகரிதயம்
தேய்த்துச் சதையின் மெல்லிதயம்
திகழச் செய்தே யெமக்கருளும்
தேவ குமரப் பரம்பொருளே

பணிவா யிருமின் மாமகிமைப்
பரமன் உலகில் உயர்த்துமெனப்
பணிவைக் காட்டச் சீடர்களின்
பதத்தைக் கழுவுஞ் செயல்வீர

தணியாத் தாகம் உலகினர்பால்
தழைத்தே யோங்கும் விருப்பினராய்த்
தாதை தம்பால் மன்றாட்டுத்
தன்மை விளக்குஞ் சீவியமே

அணிசேர் கர்த்தர் இயேசுவெனும்
ஐயா தாலே தாலேலோ
அகிம்சை புதுக்கி இரட்சிக்கும்
அரசே தாலே தாலேலோ.

## 27

வருத்தும் பாவச் சுமைசுமந்தே
வறிதே யாம்தள் ளாடியநாள்
வம்மின் வம்மின் எனவழைத்தே
வாங்கிச் சுமையை யினிதிறக்கித்

திருத்த முறவா ருதல்தந்து
தெளிவித் தருளுந் திருக்குமரா
திரண்ட மகிமை வானுலகும்
திமழ்மண் ணுலகுந் தொழுதேத்தும்

குருத்து வங்கொள் அருள்மதலாய்
கொள்கை யாவும் முடிக்கவல்ல
குணமார் திருவே எழிலுருவே
குறித்து வந்தே யெம்புறத்தும்

கருத்தும் பொதிந்து வழிநடத்துங்
கண்ணே தாலே தாலேலோ
கன்னிப் புதல்வா வளர்கருணைக்
கடலே தாலே தாலேலோ

## 28

எண்ணம் பேச்சு செயல்களினுல்
இயற்றும் பாவம் அளவிலதாய்
இயற்றிக் கல்மண் உலோகத்தில்
ஏலா வுருவம் பலவமைத்துத்

திண்ணம் வழிபா டாற்றுகின்ற
தீயோம் எம்மைத் தேடிவந்த
தேவா சீவன் உளமுதல்வா
திரித்து வங்கொள் ஓரிறைவா

விண்ணும் மண்ணும் பல்கோடி
விரிவாம் அண்ட கோளங்கள்
விளங்கத் தோற்றிக் காத்துநிற்கும்
விமலா மாந்தர்க் கிரட்சணியம்

நண்ணும் வகைசெய் தினிதருளும்
நலமே தாலே தாலேலோ
ஞானா னந்தக் கிறித்தேசு
நாதா தாலே தலேலோ.

## 29

அறுநாள் தன்னில் உலகமெல்லாம்
அருளி யதன்பின் ஏழாம்நாள்
அமர்ந்தி ருந்தே அமைதிகொண்ட
ஆற்றல் மிகுந்த பேரிறையே

குறுகும் அலகை மேட்டிமையின்
குணத்தால் 'உலகை அடிப்படுத்திக்
கோனாய் அரசு புரிவல்' எனக்
கொடிதே புரிய வதின்மீட்டுத்

இறவு கோலாம் விசுவாசம்
தேடி யளித்தெம் மனந்திருப்பித்
திருவார் பரம வுலகிலெமைத்
திகழச் செலுத்தும் அருள்மதலாய்

நறவு பிலிற்றும் மருமலரே
ஞான வொளியே தாலேலோ
நாளும் உலகிற் சமாதான
நலமே தாலே தாலேலோ.

## 30

விண்ணோர் அரசின் இளவரசே
விடிவை கறையில் ஒளிர்மின்னே
வெய்ய கரிசில் மனந்திரும்பி
விரும்பு வோர்க்கே அருளமுதே

பண்ணே ரிசையே இசைப்பயனே
பரவுங் கலையே கலைநுணுக்கே
பாட்டே பாட்டின் உட்பொருளே
பாரில் உதித்த இறைமதலாய்

## 30

மண்ணே நிறைந்த பொருள்களினால்
மகிழ வெண்ணி யுழன்றலுத்தோம்
மகிழ்வுக் குரிய கொடைவள்ளால்
மனுவே இசுர வேலரசே

கண்ணே மணியே யெம்முளத்தாற்
கருதும் உருவே தாலேலோ
கதிரார் சுடரே கன்னிமரிக்
கருவே தாலே தாலேலோ.

## 31

மூன்றா யொன்றாய் மூன்றுலகை
முகிழ்த்த வாற்றல் மிகும்இறையே
முப்பாற் பகையின் பாவவிருள்
மூடி நெஞ்சங் குருடானோம்

வான்றோய் சுடராய் இருணிலையை
மாற்றும் மகிமைப் பேரொளியே
வணங்கற் குரிய சீவியத்தின்
வள்ளால் உலக இரட்சணியம்

தோன்றும் வண்ணம் உதித்தெங்கள்
துணையாய்த் தொடரும் இறைமதலாய்
தூய தூயப் பராபரமே
துலங்கும் வழிசத் தியசீவன்

ஆன்ற பொருளே மாற்றமிலா
அன்பே தாலே தாலேலோ
அகிம்சை வழியே உலகாளும்
அரசே தாலே தாலேலோ.

# 4. சப்பாணிப் பருவம்

## 32

நாடிய பொய்மைக் குணத்தினி லென்றும்
நலிந்திடு தீவினையர்
நற்செயற் செய்தி யாஞ்சுவி சேடம்
நம்புகி லாதவரை

தேடி யிவண்வந் திரட்சணை புதுக்கித்
திருமறை தருகுருவே
தெள்ளிய தேன்பாற் சுவைமொழி மதலாய்
தெருளுறு மறைமுதலே

நீடிய பொறுமை கிருபை அகிம்சை
நிலவுயிர் தம்மிரக்கம்
நிலைத்தபே ரின்பம் துலங்கிடு தூய்மை
நிலவும் உயர்குணியே

கூடிய அன்பின் சிறுமழ களிறே
கொட்டுக சப்பாணி
குணநல மேவு குவலயக் குன்றே
கொட்டுக சப்பாணி

## 33

உறவுக ளனைத்திற் சிறந்ததோ ருறவு
உயரிறை யோடிருத்தல்
உலகினில் முன்னாள் ஆதனும் அவ்வையும்
உஞற்றிய தீவினையால்

அறநிலை மகிமை நிறைபொழில் ஏதேன்
அதனினின் றேவிலகி
ஆண்டவர் இறையோ டுறவையும் நீத்தே
அடைந்தார் மிகுபாவம்

பிறவியி லமையும் பாவமும் உடலாற்
பிறவினைப் பாதகமும்
பெற்றிழி மக்கள் பேசொணுத் துயரிற்
பிறழ்ந்த நிலைமாற்றி

குறைதவிர்த் தருளக் குவலயம் வந்தாய்
கொட்டுக சப்பாணி
கோவென வரசாள் இறைதிரு மைந்தே
கொட்டுக சப்பாணி.

## 34

கற்பனை பத்தும் இருகற் பலகையில்
கவினுறத் தீட்டியந்நாள்
கானக வழியிற் சென்றிடும் யூதர்
காவலன் மோசையிடம்

உற்றதைத் தந்திவ் வுலகெலாம் ஒழுக
உதவிய பேரிறையாய்
ஓங்கிய பசியின் யூதர்கள் புசிக்க
உன்னத மன்னவை

தெற்றெனக் கூடா ரங்களின் முன்னுல்
தெளிக்குங் கருணையுடன்
திரித்துவ நிலையில் முதலி லமைந்து
திகழ்தரு திருத்தந்தை

கொற்றவ வேந்தர் இறைதிரு மைந்தே
கொட்டுக சப்பாணி
குழந்தையின் வடிவிற் றிகழிள வரசே
கொட்டுக சப்பாணி.

## 35

தவறு களுடனே பாவமும் புரியும்
தறுகட் பாவியராய்த்
தரணியின் மீது பயனெது மின்றித்
தயங்கித் திளைத்தலுத்தோம்

அவலையா யெமையும் விட்டுவி டாமல்
அருட்கரத் தாலெடுத்தே
அன்புறு வழியிற் சென்றிட வுதவும்
அழகார் மழவுருவே

உவரி கடற்கண் புயலை யடக்கும்
உன்னத மிக்கோராய்
ஓதிய தோற்றம் முடிவுமி லாமல்
ஓங்கு பரம்பொருளே

குவலயம் வந்த குணநலத் தெந்தாய்
கொட்டுக சப்பாணி
குளிர்தரு வதனத் திறைதிரு மதலாய்
கொட்டுக சப்பாணி.

## 36

உற்பவ வுலகிற் கடவுளாற் றந்த
உணர்வில் பொருள்களையே
உருவினில் ஆக்கிக் கடவுளாய்க் கொண்டே
உஞற்றுங் கிரியையினால்

நற்பயன் ஏதும் இல்லையென் றுணர்த்தி
நானிலம் யாவுக்கும்
நல்லிறை ஒருவர் தந்தையும் ஆவர்
நாடுமின் என்றுரைத்து

முற்றுமாய் நிறைந்த முதல்வனைத் தெரிக்கும்
மூன்றிலொன் றாகியவா
மூவுல குக்கும் பேரிறை யான
முனைவன் திருக்குமரா

கொற்றவ ரெனவிக் குவலயத் தரசே
கொட்டுக சப்பாணி
கூடிய கருணை இறைதிரு மதலாய்
கொட்டுக சப்பாணி.

## 37

மழைவர எலியா புரிமன் றாட்டின்
    மனிதரின் கட்புலனாய்
  வான்வெளி தன்னில் சிறுமுகில் தோற்றி
    மல்லொலி மின்னுடனே

பிழைபுரி மக்கள் சிலைவழி பாட்டின்
    பிழைதெரிந் துணர்ந்திடவே
  பெருமழை பொழிந்து தரணி செழிக்கப்
    பெரிதருள் இறைமதலாய்

தழைவுறு சீவ வுணவெனுந் தூய்மைத்
    தனிமறை யுட்பொருளைத்
  தரணியர் தெளிய ஒழுகி யுரைக்குந்
    தலைமை யருட்குருவே

குழைவுறு மெங்கள் மனத்தி லுறைவாய்
    கொட்டுக சப்பாணி
  குளிர்மதி கோடிக் கிரணமு கத்தாய்
    கொட்டுக சப்பாணி.

## 38

நெஞ்சினிற் பிறரின் பொருள்களை யென்றும்
    நினையுங் களவுகளும்
  நீணில மாந்தர் பிறர்கெட வெண்ணும்
    நெடிய கொலைத்தொழிலும்

வஞ்சியர் தம்மை நசையுடன் நோக்கும்
    வளர்விப சாரமதும்
  வையகந் தன்னிற் பொறிகளாற் செயலால்
    வாய்த்த வினைப்பாவம்

தஞ்சமா யும்மைச் சார்ந்திடில் அனைத்தும்
    தயவுடன் மன்னித்தே
  தாங்கிய பாவச் சுமைதனை யிறக்கித்
    தருமினைப் பாறுதலே

கொஞ்சிடும் அழகின் திருவுரு மதலாய்
கொட்டுக சப்பாணி
குணநலக் கர்த்தர் இயேசுவின் பெயராய்
கொட்டுக சப்பாணி.

## 39

வளர்விசு வாசம் உடையவர் தமக்கே
வழங்குந் திருமுழுக்கு
வாய்த்திடச் செய்தே யதனிலெந் நாளும்
வலுப்பெற் றிடவேண்டி

வளமுறு கர்த்தர் பந்தியை யமைத்தாய்
வள்ளால் புளிப்பில்லா
மாவினுல் அப்பம் திராட்சையின் சாறும்
வார முதன்நாளில்

தளர்வில ராகிக் கடைப்பிடித் தொழுகும்
தன்மையை யருள்செய்தீர்
தலையென சபையின் உடல மியக்கும்
தகைசே ரருளாளா

கொளமிகு மெளிமை யுடையசற் குருவே
கொட்டுக சப்பாணி
கூடுமன் புலகம் படைத்திடும் அரசே
கொட்டுக சப்பாணி.

## 40. வேறு

அன்பே வெண்கொற் றக்குடையாய்
அன்பே நீதிச் செங்கோலாய்
அன்பே ஓருக்கை யரியணையாய்
அன்பே துருகம் டைக்கலனாய்

அன்பே நிலவும் அன்புலகம்
அமைக்க வெண்ணி நிலம்வந்தாய்
அவனி யரசர்க் கரசரென
ஆற்றல் மிகுந்த எழிலுவே

வன்பே நிறைந்த கொடுமனத்தோம்
வறிதே திரிந்து வல்லலகை
வஞ்சத் தாழ்ந்தோ மெனினுமெமை
வள்ளால் நினைந்து மீட்டெடுத்தீர்

அன்பின் செயலுக் கிணையுண்டோ
அண்ணல் கொட்டாய் சப்பாணி
அனைத்தும் உணரும் ஆற்றலுடை
அமுதே கொட்டாய் சப்பாணி.

## 41

அல்லே லூயா எனத்தூதர்
அரிய இசையிற் பாடிடவும்
ஆட்டின் இடையர் ஒருங்கிணைந்து
அடிமண் வீழ்ந்து பணிந்திடவும்

சொல்லும் வானத் தாய்வினர்கள்
சூழ்ந்து பணிந்து துதித்திடவும்
சோதி யுடுக்காண் பற்பலரும்
துலங்கும் முடிதாழ்ந் திறைஞ்சிடவும்

வெல்லும் வகையில் மண்ணுலகில்
விளங்கித் தோன்றும் இளவரசே
வீரம் எனலம் புலனடக்கம்
விளக்கி யவ்வா றொழுகியவா

செல்வக் குவியற் றிருமறையின்
தெளிவே கொட்டாய் சப்பாணி
சீர்சால் உலகர் அனைவருக்கும்
திருவே கொட்டாய் சப்பாணி.

★
★★★★★
★
★
★

# 5. முத்தப் பருவம்

## 42

உலகத் தனைவர் துன்பங்கள்
உவந்து தாமே ஏற்பதற்காய்
உதிரம் முதலா எழுதாதாம்
ஊனார் உடலில் உருக்கொண்டோர்

இலகுஞ் சுவையா ரிளங்குதலை
இயற்றி யெங்கள் செவிப்புலமும்
எண்ணும் நெஞ்சும் யாவற்றும்
இனிக்கச் செய்யும் இளமதலாய்

குலவிக் கொஞ்சும் மரியன்னை
குளிர்மென் கரத்திற் றவழ்ந்தினிய
கோலங் காட்டும் அழகுருவே
கோவே நீதி பேரிரக்கம்

நிலவுஞ் ஞானச் சுடரொளியே
நிமலா முத்தந் தருகவே
நிலைத்தெம் முளத்திற் குடிபுகுந்த
நேயா முத்தந் தருகவே.

## 43

தீய பாவம் உணர்ந்திடுதல்
திரும்பி அதனில் மனம்மாறல்
தேவ மைந்தர் தமையென்றும்
சிந்தை கொண்டே கனிவுறுதல்

ஆய விசுவா சப்பெருக்கில்
ஆழ்ந்தே யென்றும் நிலைத்திருத்தல்
அல்லல் உற்ற போதினிலும்
அசையா துள்ளம் திடம்பெறுதல்

மாய வுலகின் அழிபொருளால்
மகிழ்வைப் பெறலா மெனவெண்ணும்
மயக்க நிலையில் மாறுபடல்
மற்றும் பரிசுத் தாவியரால்

ஏய வுதவி இரட்சிக்கும்
எந்தாய் முத்தந் தருகவே
இயேசு கிறிஸ்து நாதரெனும்
இனியாய் முத்தந் தருகவே.

## 44

ஒருபன் னிருவர் தமைத்தேர்நதே
ஓதும் அப்போஸ் தலராக்கி
உலகந் தனிலே யெங்கெங்கும்
உயர்நற் செய்தி யறிவித்து

மருவும் படிசெய் தனைவரையும்
மாண்பு மிக்க சீடரென
மறுவாழ் வளித்துந் தந்தையர்க்கே
மகிமை யளிக்கச் செய்தோனிர்வாய்

தருவிற் றழைத்த சீவகனி
தந்தேயெம்மை வாழ்வித்துத்
தமியேங் கண்கள் காணவெனத்
தரைமேல் வந்த அருளரசே

மருவின் நறவுக் கோகனக
மலரே முத்தந் தருகவே
மாணிக் சத்தின் செவ்விதழ்கள்
மலர்ந்து முத்தந் தருகவே.

## 45

ஓங்குந் தொனியெக் காளமிட
உலகீர் எழுவீர் எனத்தூதன்
உரைக்கப் பிதாவின் முன்பெழுநாள்
உறுத்தே யிடப்பாற் குழுமவைத்து

'நீங்கள் எம்மை நெருங்காமல்
நெருங்கி யாமே வந்தமயம்
நினைவி லெம்மைக் கொள்ளாமல்
நிலையா வுலகப் பொருள்மயக்கின்

தீங்கின் விளைவே தினமெண்ணித்
திருட்டு வஞ்சம் பொறாமைகளால்
தீய புரிந்தீர்' எனச்சினக்குஞ்
செந்தீ யெம்மைத் தகிக்காமல்

தேங்கும் அன்பால் மீட்பருளும்
தேவா முத்தந் தருகவே
தேனூர் குமுத மலரிதழின்
திருவே முத்தந் தருகவே,

## 46

காமம் வெகுளி மயக்கமிலாக்
கனிந்த இன்சொல் பகர்பவராய்க்
சுருதி யும்மைக் கண்டவர்கள்
ககனப் பிதாவைக் கண்டவராம்

சேம நிதியாம் உமைக்காணூர்
சிறிதும் பிதாவைக் காணூரே
செஞ்சொல் மறையிற் றெரித்தவணம்
சிறியேம் உம்மைக் கண்டடைந்தோம்

தூமத் தழல்போன் றெப்பொருளும்
தொடுத்தே யியக்குந் திரிதுவமே
தூய்மை யென்றும் உள்பொருளாய்த்
துலங்கும் அரசே இயேசுவெனும்

நாமத் துரிய இறைமைந்த
நாதா முத்தந் தருகவே
நாடி யெம்மைத் தேடிவந்த
நலமே முத்தந் தருகவே.

## 47. வேறு

அள்ளக் குறையா அன்பின் மதலாய்
அழகார் திருவுருவே
ஆனந் தத்தின் எல்லை கடந்த
அமுதச் செழுங்கனியே

கள்ளம் புரிந்து வஞ்சத் துழல்வோர்
காணுகி ஒப்பொருளே
கனிந்து கனிந்து நினைவோர் உங்கள்
கருத்துள் அமரிறையே

உள்ளிப் பிறாக்குந் தமக்குந் நிறைந்தே
யுற்ற பலகுறைகள்
ஓதிக் கருத்தாய் வேண்டு வோர்க்கே
உதவும் அருட்டிருவே

முள்ளின் முடியாய் யாவும் வல்லாய்
முத்தந் தந்தருளே
மூவா இளையாய முன்னேன் புதல்வா
முத்தந் தந்தருளே.

## 48

சுற்றிக் குழுமி இசையின் றூதர்
தூய தூயரெனச்
சொல்லிக் ககனத துலகில் ஆர்ப்பத்
துலங்கும் அருட்கொடையாய்

வெற்றிக் குரிய வீரம் என்ப
விளங்கும் புலனைந்தும்
வெல்லல் எனவே யுரைத்தே யொழுகும்
மெய்மை தெரித்தருளக்

குற்றம் மலிந்த வுலகில் வந்தே
கொடியோர் நிந்தையெலாம்
குணத்தாற் பொறுத்து மீட்பை யளிக்கும்
குளிர்மா மதியனையாய்

முற்றிக் கனிந்த கனிவா யிதழால்
முத்தந் தந்தருளே
முன்னிக் கருமம் முடித்த முதல்வா
முத்தந் தந்தருளே.

## 49

மண்ணு ருலகிற் பலவாஞ் சமயம்
மயக்கும் நிலையனவாய்
மாற்றம் அடைந்து தம்மிற் பிணங்கி
மலிந்த இருட்படலம்

நண்ணு வகையில் வேதத் தெளிவாம்
ஞானச் சுடர்பரப்பும்
நனிசேர் சபையைத் தோற்றி யெம்மை
நாடும் படிவைத்தாய்

கண்ணு கியவா கருத்துள் நிறைந்த
கருணை வாரிதியே
காலந் தன்னிற் பொழிமா முகிலே
கருதும் எழிலுருவே

தண்ணு ரருளின் தகைசேர் மதலாய்
முத்தந் தந்தருளே
சபையாம் உடலிற் றலையா கியவா
முத்தந் தந்தருளே.

## 50

பெருகும் புனல்சேர் விழியர் உணர
பிள்ளைத் திருவுருவில்
பெரிதுந் துயரம் பரவும் உலகிற்
பிறந்தீர் எமதுவினை

கருகும் படிவந் தருளா யெனிலெங்
கவலை துடைப்பவர்யார்?
கடிய வன்பேய் தலையை மிதிக்குங்
கமலத் திருவடியாய்

உருகி யுருகிக் குழைவுற் றவர்கள்
உள்ளத் தினிதென்றும்
உண்ணும் அமுதத் தீம்பால் மறையை
உணர்த்துங் குருபரமே

முருகு பிலிற்றுங் கனிவா யிதழால்
முத்தந் தந்தருளே
முறுவல் தளிர்க்குஞ் செங்கேழ்த் துவர்வாய்
முத்தந் தந்தருளே.

## 51

சூதா னவையிற் பொய்யின் மீளாத்
துயரில் அழிந்துபடும்
சூழ்ந்த வுலகப் பொருளில் புகழில்
தொடரும் மேட்டிமையில்

ஏதா வதொரு வீண்வே லையினில்
எம்மை யிழுத்தலைத்தே
இதயங் கடினப் படுத்தும் பேயின்
எரிவாய் நரகத்தில்

போதா வகையில் எமைமீட் டெடுக்கும்
புனிதத் தெழின்மதலாய்
பொற்பா ருருவே யூத குலத்தர்
போற்றும் விசுவாச

மூதா தையரைக் காக்கும் முதல்வா
முத்தந் தருகவே
முழுமா மதியே பவளத் திருவாய்
முத்தந் தருகவே.

# 6. வருகைப் பருவம்

## 52

உண்மை நிலையின் சீவனென
உள்ளும் புறமும் ஒளிர்ந்தருள்வாய்
உம்மை சீவன் ஆகப்பெறூர்
உடலம் வெற்றுக் கூடாமால்

திண்மைக் கொடியேம் திருந்துவணம்
தெளிந்த வசனத் தீம்பாலால்
திகட்டா தளித்தே எம்ஆவி
தினமும் வளர்க்கும் இறைமதலாய்

வண்மைக் கொடையால் அண்டங்கள்
வானில் அமைத்தே அவைபுரக்கும்
வள்ளால் உலகர் உமைப்பற்றி
வானப் பிதாவை அடைவரெனில்

எண்ணுந் தரத்தோ உம்பெருமை
இனியாய் வருக வருகவே
என்றும் நிலவும் இளமையருள்
எழிலாய் வருக வருகவே.

## 53

வியப்புக் குரிய வகைதனிலே
மிளிருங் கன்னி மரிவயிற்றில்
விளைந்து வந்தே அவதரித்தீர்
மேவும் பணிசெய் சற்குருவே

நயப்புக் குரிய இன்மொழியால்
நாடெங் கிலுமே இறையுணர்த்தி
நாடும் வண்ணம் மறைபுகன்றீர்
நம்பும் சீடர் தமக்கிரங்கித்

தயக்கம் இன்றி யுணவளித்தீர்
தண்ணீர் காற்றை யடக்கிவைத்தீர்
தரையோர் பலவற் புதங்கண்டும்
தம்மை யும்பால் இணைக்காமல்

மயக்கத் தாழ்தல் என்னேயோ
மன்னே வருக வருகவே
மகிமைக் குரிய விண்ணிறைவர்
மைந்தே வருக வருகவே.

54

எண்ணூர் சமய வாதிகளால்
இயற்றுங் கலகப் பொருள்மயக்கத்
திருளிற் சேரா தெமையெடுத்தே
இலங்குஞ் ஞான வொளியுதவும்

அண்ணல் உமக்கே அடித்தொழும்பாய்
ஆன்ம கவலை கொண்டோராய்
ஆற்றும் பாவ வுணர்வுமிக
அரிய மறையின் தெளிபொருளை

உண்ணு டுவர்க்கே மறைஞானம்
உதவிப் புனிதப் பிறப்பருளி
ஓங்கும் பரம விண்ணுலகில்
உறவாய் வைக்கும் இறைமதலாய்

தண்ணூர் பொழிலில் வளர்சீவ
தருவே வருக வருகவே
தருக்கும் அலகைத் தலைமிதித்த
தலைவா வருக வருகவே.

55

இழிவார் பேயை வணங்குகின்ற
எங்கள் தலைகள் உம்முன்னால்
இறைஞ்சும் வணமே திருப்பியுளீர்
இனிதாய்ச் சிற்றின் பக்கதைகள்

அறிவா னவற்றுள் மீட்டென்றும்
அரிய வேதம் பார்த்திடவும்
ஆம்நற் செய்தி கேட்டிடவும்
ஆகும் நெறியிற் றிருத்திவைத்தீர்

பழியே பேசும் எம்வாயைப்
பரமன் புகழைப் பாடவைத்தீர்
பார்க்கி லிதற்கோர் கைமாறு
படியிற் புரிதற் குளதாங்கொல்?

வழியே யுண்மை சீவனுமாம்
வள்ளால் வருக வருகவே
வானத் தென்றும் நித்தியமாம்
வாழ்வே வருக வருகவே.

## 56

அரிய ஞான முழுக்கேற்றும்
ஆவிக் குரிய வளர்வின்றி
அன்பு நிறைவின் குணஞ்சிறிதும்
அமையப் பெறுராய் அருமறையின்

விரிவைக் காண வறியாராய்
விளங்கும் பெயரின் கிறித்தவர்க்கே
விண்ணோர் ஆவி யரைநிரப்பி
வேதப் பாலால் உயிர்வளர்த்து

தெரிய விதயந் திரும்பிடவே
செய்தீர் மனித குமாரரெனத்
தேனார் சோலைப் பெத்தலையிற்
றிகழ வந்தே அவதரித்தீர்

உரிய எமையேற் றுய்விக்கும்
உயர்வே வருக வருகவே
உள்ளம் இனிக்கக் காட்சிதரும்
ஒளியே வருக வருகவே.

## 57

விரியுங் கிரணத் தரதனத்தில்
விளங்குஞ் சிறப்பு மதிப்பெவையும்
விழியில் குருடன் அறியான்போல்
வெய்ய வஞ்சத் தலகைதனால்

கரிசுக் குருட்டால் உம்சிறப்பைக்
காணு திருந்தோம் எமக்கிரங்கிக்
கருணை பொழியுந் திருவுருவில்
காணும் படியே நிலத்துதித்தீர்

பரிசுத் தாவி இறைவரினல்
பரிந்து பாது காத்துண்மை
பார்க்கும் படியே அருள்செய்த
பரமா னந்தத் தருட்குருவே

குருசு வழியில் எமையழைக்குங்
கோவே வருக வருகவே
கூடும் எழிலார் திருவுருவின்
குழந்தாய் வருக வருகவே.

## 58

உலக மக்கள் அனைவருக்கும்
உரிமை யுள்ள மெய்ப்பொருளாய்
உள்ளத் தரியா சனத்தமர்ந்த
ஒளிகால் நிலைத்த பேரொளியே

கலகப் பொறிவாய்ப் பட்டிழிந்த
கரிசுட் கிடக்கும் மனுக்குலத்தைக்
கண்கா ணித்தே மீட்பருளுங்
கருணைப் பெருக்கே கவின் நிறைவே

நிலவும் உலகுக் காதியந்த
நிமலப் பொருளே திருச்சபையை
நிறுவிப் பரிசுத் தாவியரை
நிறைத்துப் புரக்கும் பரங்குருவே

அலகில் எழிலார் உருமிளிரும்
அன்பே வருக வருகவே
அருளார் நோக்கின் இயேசுகிறிஸ்
தையா வருக வருகவே.

## 59. வேறு

வேத வசனம் தினமும் ஓதி
விளக்குஞ் செம்பொருளை
விரிவா யுணருந் திறமில் லாதே
வீணில் நாட்கழித்தோம்

போதம் மிகுந்த நற்செய் தியினைப்
புத்தி நிறுத்தாமல்
புந்தி வளர்க்க நாளும் உழைத்துப்
புன்மை மலிந்திட்டோம்

சாதல் வழியிற் குணுங்க ளிழுக்கச்
சார்ந்தோ மெனினுமெமைச்
சாற்றுந் தூய ஆவி நிறைத்தே
சபையிற் சார்ந்தொழுக

ஆதல் புரிந்து மீட்பை அளிக்கும்
அரசே வருகவே
அடியேம் காணும் உருவிற் பொலியும்
அன்பே வருகவே.

## 60

நண்ணுங் காலத் றவர்கள் விரைந்து
நடக்கும் படியாக
நலியுந் தொழுநோ யாளர் வனப்பின்
நல்யாக் கையராகக்

கண்ணற் றவர்கள் உம்மை யணுகிக்
காணும் படியாகக்
காதற் றவர்கள் குதலை கேட்டே
களியும் படியாக

எண்ணும் இதயக் குருடர் உம்சொல்
ஏற்கும் படியாக
எழிலார் கரங்கள் மெலிந்தோர் உம்முன்
இறைஞ்சும் படியாக

மண்ணில் விளங்க வளருந் தூய
மகிபா வருகவே
வானத் தரசை நிலத்தும் அமைப்பீர்
வருக வருகவே.

## 61

ஒருநாற் பதுநாள் தனியர் எனவே
உற்ற வனுந்தரத்தில்
உண்ணு துரையா துபவா சத்தால்
உண்மை யடைந்ததன்பின்

பெரிதும் பசியின் நீலமே விடுநாள்
பிரபஞ் சத்தேவப்
பேய்மும் முறையில் வஞ்சம் விரிக்கப்
பின்னுல் போவென்றே

திருவாய் மலர்ந்து பேயை விரட்டும்
திரலாய் வருகவே
தேவ பிதாவின் அன்பின் மதலேத்
திருவே வருகவே

அருளின் வழியே யெமைபா லிக்கும்
அண்ணல் வருகவே
அவனிப் பொருளாய் உவமிக் கொணுத
அரசே வருகவே.

# 7. அம்புலிப் பருவம்

## 62

பாரிலொளி வீசியே உலவியெப் பொருள்களும்
பார்த்திடப் புரிவை நீயும்
பரவுமொளி வீசியே உளத்திருள் துமித்திந்த
பாரில்வலம் வரும்எம்மிறை

சேரினிய தண்ணிலவு பொழிந்தே குளிர்விப்பை
சிறந்தவன் பார்ந்தமொழியால்
சிந்திக்கும் மெய்யடியர் சிந்தையி லினித்தென்றும்
சேவையாற் குளிரவைக்கும்

காரியப் படுமுலகின் முச்சுடரில் நடுவைநீ
கருதையன் மைந்தாவியில்
கருணைமிகு நடுவராம் விண்ணில் விளங்குவைநீ
கர்த்தருங் ககனவாசி

ஆரியக் கிறித்தேசை சிறிதுநீ ஒப்புவை
அம்புலீ ஆடவாவே
அழகுமிகு பெத்தலைச் சிறுவனுடன் சேர்ந்துநீ
அம்புலீ ஆடவாவே.

## 63

இரவலர்க் கருளுவை நீயுமே எம்மிறை
இரவலர் தமக்கருள்செயும்
எழில்நிறை பிறையுருவில் வளர்வைநீ எம்மிறை
ஏற்றவுரு தாங்கிவளரும்

முருகொழுகு குமுதத்தை முகிழ்விப்பை எம்மிறை
முன்னிஞேர் வாய்க்குமுதவீ
முகிழ்வித்து மறைவசனத் தெளிதேன் பொழிவிக்கும்
முகட்டுமலை நீயுலவுவை

உருகுவிழி நீர்சொரிய மன்ருட மலமுகட்
டுலவியெம் மிறைநிலவுமால்
உலகினர் யாவர்க்கும் தண்ணிலவு சிந்துவை
உயர்விழியின் நிலவுசிந்தும்

அருகுனை அழைத்திடுங் கர்த்தரைச் சிறிதொவ்வும்
அம்புலீ ஆடவாவே
அழகுமிகு பெத்தலைச் சிறுவலுடன் சேர்ந்துநீ
அம்புலீ ஆடவாவே.

## 64

தேய்மதி யெனவுனைச் சொல்லுவர் எம்மிறை
தேயாத முழுமதியமாம்
திக்குமேற் கெனவொரு திசைசெல்வை எம்மிறை
திசைபத்தும் யாண்டுஞ்செலும்

பேய்நிசி தனிற்புறத் திருள்சிறிது நீக்குவை
பிறஅகத் திருளகற்றும்
பெய்கொண்டல் தனில்மறைவை, எம்மிறை யூர்தியாய்ப்
பெருங்கொண்டல் தனில்விளங்கும்

காய்ந்துநீ விரகமுறு மாதரை வருத்துவை
கருணையால் இறைதிருத்தும்
காலங்கள் தம்மிலே உட்படுவை எம்மிறை
கால கா லங்கடக்கும்

ஆய்ந்திடின் எம்மிறை ஒப்பிலா யென்னினும்
அம்புலீ ஆடவாவே
அழகுமிகு பெத்தலைச் சிறுவலுடன் சேர்ந்துநீ
அம்புலீ ஆடவாவே,

## 65

இரவடைவை நீயென்றும் எம்மிறை யொருபோதும்
இரவினை அடைதலின்ரும்
எழிலுரு களங்கத்தில் விளங்குவை யெம்மிறை
எய்திடார் களங்கமதனில்

பரவுநின் ஒளியினுற் கள்வர்கள் சுளித்துனைப்
பழித்துநிந் தனைகூறுவர்
பாவியரும் கள்வரும் எம்மிறையைச் சார்ந்திடின்
பணிசமா தானமுறுவர்

சிரற்றுதற் செய்யாத பரிசுத் தாவியரால்
திருச்சபை தமைப்புரந்து
தேவனுர் பிள்ளைகளை அண்மிக்காத் திடவாற்றி
சிலுவையைக் கருதுவோர்க்கே

அரவுபேய்ச் செயலினில் மீட்பருளுங் கர்த்தருடன்
அம்புலீ ஆடவாவே
அழகுமிகு பெத்தலேச் சிறுவலுடன் சேர்ந்துநீ
அம்புலீ ஆடவாவே.

## 66

விண்ணுலவு கதிரவன் ஒளிபெற்றுத் திகழ்வைநீ
விரிசுடர்க் கதிர்தனக்கும்
வேண்டிய வொளிதந்து வானவெளி தன்னிலே
விட்டுவைத் துளரெம்மிறை

கண்ணிலவு காட்சியால் வளர்வதும் தேய்வதும்
காசினியில் சின்னுட்களில்
காணுது செல்லவும் காணவரு வதுமாவை
கர்த்தரெம் மிறைமைந்தரோ

மண்ணுலகும் விண்ணுலகும் வளர்நிலையி லெந்நாளும்
மாருமல் நிலவி நிற்கும்
மகிமைமிக மெய்யடியர் மறுபிறப் பெய்தவும்
வானுலகிற் குடியேறவும்

அண்மியே கிருபைசெயும் ஆண்டவர் இயேசுவுடன்
அம்புலீ ஆடவாவே
அழகுமிகு பெத்தலேச் சிறுவலுடன் சேர்ந்துநீ
அம்புலீ ஆடவாவே.

## 67

மனிதர்கள் பாவத்தில் வீழ்ச்சியுறல் தாளாது
மன்னுமிறை விண்தாதையர்
மனிதர்க ளிடத்தினிற் பிரியமுற் றவராகி
மறமலிவின் மீட்பருளவே

இனியதம் மைந்தரை அழைத்ததற் கானவை
இயம்பிமுத் திரைபதித்தே
இதற்கான முறையினில் மண்ணுலகில் மனுவுரு
எடுத்தெலாம் முடித்துவருவாய்

கனியவே மொழிந்துவிடை யுதவியே விடுத்திடக்
கன்னிமரி வித்துதித்துக்
காசினியில் வந்தஎம் இறைமைந்தர், உன்றனைக்
கருதிவா வெனவழைத்தும்

அநியாய மாகவே வாரா திருப்பதென்?
அம்புலீ ஆடவாவே
அழகுமிகு பெத்தலைச் சிறுவனுடன் சேர்ந்துநீ
அம்புலீ ஆடவாவே.

## 68

ஒருசொலால் வெளிவான் முகடுபல் கோளங்கள்
உதவியே அவையாவையும்
உற்றவணம் அதனதன் வட்டத்தில் நிலைநிறீஇ
உலவவைத் தவைகாத்திடும்

பெருவலிமை யாற்றலின் இணையிலா இறைமைந்தர்
பிழையுடல் தாமெடுத்தே
பிரபஞ்ச வுலகினிற் சிறுமழலை யாகிய
பெருமையைச் சற்றுநினைவாய்

வருகமகிழ் வெய்தலாம் எனவுன்னை அழைக்கவும்
வரக்காலந் தாழ்ப்பதென்னே
வானவெளி தன்னில் எழிலாய் விளங்கவுனை
வைத்தவரும் இவரல்லவோ

அருகினில் வரவுனக் காம்நன்று தேர்ந்துநீ
அம்புலீ ஆடவாவே
அழகுமிகு பெத்தலேச் சிறுவனுடன் சேர்ந்துநீ
அம்புலீ ஆடவாவே.

## 69

காற்றையுங் கடலையும் அதட்டிப் பணித்தவர்
கடிந்துனை வரச்செய்துமே
கமலமலர்க் காலடியில் வீழ்த்துதல் அரியதோ
கருணையுடன் இரக்கமதனை

போற்றுமுறை வந்தவர் ஆதலின் அச்செயல்
புரிந்திலர் இதையுணர்ந்தே
புண்ணியப் பரிசுத்தர் அழைக்கின்ற குரல்கேட்டு
புறப்பட்டுக் கடுகவருவாய்

தோற்றப் பொலிவினுல் விசும்புள்ள நினைவினுல்
துலங்குகிளர் செய்தன்மையால்
துர்க்குண மேட்டிமைக் குணமேவில் என்றென்றும்
துயர்கூட உளமழுங்குவை

ஆற்றுப் படுத்திடுேம் எம்மிறை இளவலுடன்
அம்புலீ ஆடவாவே
அழகுமிகு பெத்தலேச் சிறுவனுடன் சேர்ந்துநீ
அம்புலீ ஆடவாவே.

## 70

உற்றதாம் பாதகத் தன்மையை யுணர்ந்துபின்
உளமதி னின்றுதிரும்பி
ஓங்குவிசு வாசியாய் உண்மைமறை வாக்கினுல்
உயர்முழுக் கேற்றபின்னர்

பெற்றதாம் ஆத்துமத் தந்தையால் மைந்தரால்
பிறழாத ஆவிபெயரால்
பிரியவுப தேசியார் நீர்முழுக் கேற்றபின்
பேதமை யெலாமொழித்து

சுற்றமென தேவனின் பிள்ளைக ளெனக்கூடி
சுடர்ஞான வொளிபரப்பும்
சுவிசேட மன்றமே சார்ந்துமறை பொருளாய்ந்து
சுகபந்தி அமர்வோர்களின்

அற்றம்வந் தாரா தனேயேற்குங் கர்த்தருடன்
அம்புலீ ஆடவாவே
அழகுமிகு பெத்தலைச் சிறுவனுடன் சேர்ந்துநீ
அம்புலீ ஆடவாவே.

## 71

இன்புநிறை விண்ணுலகின் இறைத்தூதர் அண்மியே
இனியபொருள் சேர்ந்தபாடல்
இசையுடன் தாளமும் இசையவே துதிக்கின்ற
ஏற்றமார் நிலையினின்றும்

வன்புசே ரிவ்வுலகில் மனுவுரு வெடுத்தெம்மை
வான்கதி புகுத்துதற்காய்
மறையுரை போதித்தும் தம்வாழ்வில் சாதித்தும்
வளர்பொறைக் குணமேவிட

துன்புசெய் கொடியரின் நிந்தையைத் தாங்கியும்
துக்கநிலைப் பாடடைந்தும்
தூயநிலை மாறுமல் இரக்கமிகு தன்மையால்
துலங்குமண் ணுலகுதனிலும்

அன்புசே ரிறையுலகை அமைக்கின்ற கர்த்தருடன்
அம்புலீ ஆடவாவே
அழகுமிகு பெத்தலைச் சிறுவனுடன் சேர்ந்துநீ
அம்புலீ ஆடவாவே.

# 8. சிற்றிற் பருவம்

## 72

நீரா ருலகில் அவதரித்து
நிறைவார் புனித குணமேவி
நிமலத் தன்மை பெற்றொளிரும்
நிகரில் லாத அருட்குருவே

காரார்ந் துறையும் மலைமுகட்டில்
கருதும் உலகர் தமக்கிரங்கிக்
கருத்தாற் செபஞ்செய் திறைவருடன்
கனிந்து கழறும் உரையமுதே

பாரார்ந் திடுமெய் பொருள்களையும்
படைத்துக் காத்தே இரட்சணியம்
பகர்ந்து திரும்பும் உளத்தினரைப்
பரத்தில் இணைக்கும் இறைமதலாய்

சீரார் கமல மலர்த்தாளாற்
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
செல்வம் மலிபெத் தலைச்சிறுவா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே.

## 73

எங்கே யெங்கே யெனத்தேடி
எய்தி யும்மைப் புரந்தொளிரும்
ஏகத் துவத்தில் மூன்றாகி
இலங்கும் நடுவாள் தத்துவமே

பொங்கே ருற்றின் சீவநதிப்
பொலிவே மரணந் தவிர்த்துதவும்
புனிதா புனிதத் தியேசுவெனும்
புகழுக் குரிய திருத்தேவே

பங்கே ருகத்தின் திருமுகத்தில்
பவளக் கனிவாய் முறுவலித்துப்
பரிவால் நோக்கித் திருவசனம்
பகரும் பரம சற்குருவே

செங்கேழ் மலர்த்த திருவடியால்
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
செல்வம் மலிபெத் தலைச்சிறுவா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே.

## 74

முந்தைப் பொருட்கும் முந்தியவாய்
முடிவு தோற்றம் இலாதவராய்
மோன வெளியில் ஆனந்தம்
முகிழ்த்து விளங்கும் அருள்நிறைவே

தந்தை யுலகின் மகிமையெலாம்
தாங்கி விண்ணோர் துதிமுழக்கில்
தாமின் புற்ற நிலைதவிர்ந்துத்
தழைத்த சாபத் துலகினிலே

விந்தை யாகக் கன்னிவித்தில்
விளங்கித் தோன்றி மனத்தாழ்மை
வேண்டி வறுமை தனையேற்று
விரும்பும் பொறுமைக் குணக்குன்றே

சிந்தை நிறைந்த அருட்குழந்தாய்
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
செல்வம் மலிபெத் தலைச்சிறுவா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே.

## 75

பகைக்கும் வணமே கொடியோர்கள்
பரமா வும்மை யுணராது
பாடு படுத்தித் துயரமிழ்த்தப்
பணிவா யேற்று வசனவிதை

விதைத்து வளர்த்து பயன்யாவும்
விளையச் செய்து கதிரறுத்து
வேளை யறிந்து தானியத்தின்
விளைவைச் சேர்க்குந் தொழிலாளா

கதைத்துப் பொய்யே யுரையாடிக்
காலம வீணில் கழிக்காமல்
கனிவா லும்மைக் கருதவைத்த
கருணைக் கடலே பேய்வலிமை

சிதைக்கும் மலரார் திருவடியால்
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
செல்வம் மலிபெத் தலைச்சிறுவா
சிறியேஞ் சிறறிற் சிதையேலே.

## 76

வானில் நிலவும் இறையரசு
வையந் தனிலும நிலைபெறவே
வானின் றிறங்கி நிலவுலகில்
வறுமை பொறுமை எளிமைமிக

ஊனின் உடலம் எடுத்துவந்தீர்
உம்மை யன்றிப் பிதாமுன்னர்
உறுவர் எவர்தாம் உலகினிலே
உயர்தலும் வாயிற் படிவழியே

கானில் ஒருநாற் பதுநாட்கள்
கூடிய உபவா சச்செபத்தில்
கழித்து மேன்மை வல்லமையும்
கருணைப் பெருக்கும் அமைந்தென்றும்

தேனி னிக்கும் இறைபுதல்வா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
செல்வம் மலிபெத் தலைச்சிறுவா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே.

## 77

முற்றும் பலவாங் கோடியண்டம்
முகட்டு வானத் தோர்சொல்லால்
மூகிழ்த்துக் காத்து விளையாடும்
முழுமைப் பொருளே உணர்வுடையோர்

பற்றுந் தூய தூயரெனும்
பரமா னந்தப் பரம்பொருளே
பரவும் உலகும் ஐம்புலனும்
படர்ந்த வலகை முப்பகையும்

கொற்றம் புரிந்து தடந்தோளிற்
குளிரார் வாகைத் திணைசூடும்
கோவே ஆயச் சிறுமியராய்க்
கூடி வண்ட லிழைத்திடுமெம்

சிற்றிற் சிதைத்தல் உமக்கழகோ
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
செல்வம் மலிபெத் தலைச்சிறுவா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே.

## 78

காலைத் துயிலில் எழும்பொழுதே
கருத்தாய்த் துதியோ டெழுந்திருந்து
கவுடள் செய்த வுதவியெலாங்
கருதிக் களிந்து மறைமொழியாம்

பாலைப் பருகி ஆவிதனில்
பரம வளர்ச்சி தனையுற்று
பாருள் ளோர்கள் நற்செய்தி
பரவும் ஒளியால் உளமகிழ்வர்

மேலைத் தந்தை பாற்செல்லும்
மெய்மைக் குறுக்கைப் பாடனைத்தும்
மேவும் வழியே சிவியமே
மிகும்உம் ஆற்றற் கிவையாங்கொல்?

சேலைப் பழித்த விழிச்சிறுமிச்
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
செல்வம் மலிபெத் தலைச்சிறுவா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே.

## 79

இறைவர் மைந்தர் இருக்குமிடம்
இனிய சுவர்க்கம் எனுமுண்மை
இசைய இம்மண் ணுலகத்தை
இனிய சுவர்க்கம் ஆக்குகின்ற

நறைவா யொழுகும் இளங்குதலை
நவிலும் இறைவர் திருமதலாய்
நம்பும அளவில் விண்ணுடுக்கள
நானு வுலகப் பொருளனைத்தும்

நிறைவார் மகிமை பெற்றொளிரும்
நிகழ்ச்சி கண்டே யுளந்தெளிந்தோம்
நினைந்தெம் பாவச் சிறைவிடுக்க
நேர்ந்த மனித யாக்கையெனும்

சிறைவாய்த் தளைந்த இறைபுதல்வா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
செல்வம் மலிபெத் தலைச்சிறுவா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே.

## 80

கூர்த்த மதியால் உலகினரைக்
கொடிய செயற்கே யுளளாக்கி
குவல யத்தின் பொருள்களையே
குறித்தைம புலனுக் கிரையூட்டி

ஆர்தத வாறே மனுக்குலத்தை
அடிமைப் படுத்தி வீழ்த்தியென்றும்
அரசு புரிவல் எனவன்மம
அறைந்த வஞ்சப் பேய்ச்செயலை

கார்த்த விருளார் மனக்குருடர்
காணா ராகி வீழ்ச்சியுறல்
கருதி மீட்கும் படிவந்த
கருணைப் பெருக்கே இறைப்புதல்வா

சீர்த்த வகையே செயல்வல்லாய்
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
செல்வம் மலிபெத் தலைச்சிறுவா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே.

## 81

அழிக்க வென்றால் எம்முளத்தின்
ஆண வத்தை அழித்திடுக
அழிக்க வென்றால் வஞ்சமிகும்
அடர்ந்த செயலை அழித்திடுக

அழிக்க வென்றால் பாவநிலை
அனைத்தும் அடியோ டழித்திடுக
அழிக்க வென்றால் பிறர்க்கிடுக்கண்
ஆக்கும் கொடுமை அழித்திடுக

அழிக்க வென்றால் துக்கநிலை
அமிழ்த்துங் காமம் அழித்திடுக
அழிக்க வென்றால் சினம்துன்பம்
ஆகா தவற்றை அழித்திடுக

செழிக்கும் புவனத் திறைமதலாய்
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
செல்வம் மலிபெத் தலைச்சிறுவா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே.

# 9. சிறுபறைப் பருவம்

## 82

வெறுமைசே ருளந்தனில் வெய்யதாம் பேய்களே
வீற்றிருந் தரசுசெய்ய
விமலமெய்க் கர்த்தரே உமக்கென்றும் ஆகாத
வினைகளை விளைத்துநாளும்

பொறுமையை யிழந்துவீண் வஞ்சனைச் சூதினால்
பொய்மையை நிறைத்தென்றுமே
புறட்டான மாந்தொழிற் பாவத்தில் விரும்பியே
புத்திகெட் டுழன்றலுத்தோம்

நறுமணங் கமழ்கின்ற இளந்தளிர் உருவமே
நாடும்எம் பிழைகளெல்லாம்
நற்கருணை யால்பொறுத் தாள்கின்ற தெய்வமே
நலந்தரும் ஞானவமுதே

சிறுமையுந் தாழ்மையுங் கொண்டொளிர் செல்வமே
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கியொளிர் பரநிலை முதற்குரவ
சிறுபறை முழக்கியருளே.

## 83

ஏரார்ந்த வுருவந்து கண்களால் நோக்கியே
இதழ்கள்புன் முறுவலிப்ப
இணையிலாப் பேரின்ப மெய்க்காட்சி நல்கிடும்
இலங்கு திரி யேகமுதலே

போரார்ந்த மண்ணுலகில் பொய்ப்பொருள் நாடியே
புன்மையே மலிந்தவெளியேம்
பொன்றிக் கெடாதுவருள் பொழிகின்ற புனிதமே
பூரணத் தியேசுவள்ளால்

நீரார்ந்த வுலகிலும் விண்ணுலக வாட்சியை
நிலைநிறுத் தும்வண்ணமே
நினைந்தெங்கள் உண்ணின்று விண்ணர சமைக்கின்ற
நிலையான மெய்மை நிறைவே

சீரார்ந்த விளைபுலம் பெத்தலேச் செல்வமே
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கியொளிர் பரநிலை முதற்குரவ
சிறுபறை முழக்கியருளே.

## 84

ஆவிமண வாட்டியர் ஆண்டவர் இயேசுகிறிஸ்
தன்புமண வாளரும்மை
அரியதிருச் சபைமன்றில் மன்றல்செய் முரசமும்
அழிம்பனுடன் உலகுயாக்கை

மூவகைப் பகைவென்று வாகைபுனை வோர்களின்
முன்றிலின் வெற்றிமுரசும்
மொய்த்தமகி மைக்குரிய விண்ணுல களிக்கின்ற
முழங்கொலிக் கொடையின்முரசும்

காவலர் தங்களால் மும்முரசம் ஆர்க்கின்ற
கடிநகர் நாசரேத்தில்
கன்னிமரி விததாகிக் கவினுருவில் வந்துற்ற
கர்த்தராம் எழில்நிதியமே

சீவிய விசுவாசி யுண்கின்ற அமுதமே
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கியொளிர் பரநிலை முதற்குரவ
சிறுபறை முழக்கியருளே.

## 85

கடலெனுந் துன்பமே நிறைவாழ்வி லாழ்ந்தாழ்ந்து
கரையேற லின்றி நாளும்
கலங்கித தவித்தஎமை கரைசேர்த்து வான்கதி
காட்டவே சகுணைகொண்டீர்

உடல்மனு மைந்தரும் உயிரிறை மைந்தரும்
உடனிணைந் தொருவராகி
உலகினி லுதித்தென்றும் இரட்சணியம் புதுக்கிடும்
ஒப்பிலா இன்பநிறைவே

சுடர்பருதி யொன்றதாய்ப் பருதிசூ டொளிமான
சொலலின்மூன் றாதலபோனறே
துலங்குமூன் றாகியும் ஒன்றான தெய்வமே
தூய்மையா யுமமி லடியோம்

திடமாக வேரூன்ற அருள்செய்த அண்ணலே
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கியொளிர் பரநிலை முதற்குரவ
சிறுபறை முழக்கியருளே.

## 86

ஓரிறை உண்டெனவும் உயர்ந்தவவர் தன்மையை
ஓதுமறை தெரிக்குமெனவும்
உற்றபல தெய்வவழி பாடுபேய் வழிபாடும்
உரித்தல வென்றுதேர்ந்து

நேரிய முறைதனுல் மகத்துவத் தேவனை
நினைந்துநினைந் துளமுருகியே
நிலையான வழிபாடு செய்துற்ற யூதர்க்கு
நேர்ந்த எகிப் தடிமைநீக்கி

பாரினிற் செழித்தபுலம் காணுன் இருத்தியவர்
பரவுவழி மரபுதித்தே
பார்வைக் கெளிமையாய்த் தாழ்மையாய் வந்தவா
பாருளோர் உய்திபெறவே

சீரியச் செயல்பலவுஞ் செய்தே முடித்தவா
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கியொளிர் பரநிலை முதற்குரவ
சிறுபறை முழக்கியருளே.

## 87

பந்தமுறு வெம்பாவத் தொழுநோய் ஆத்துமம்
பற்றியே அருவருக்கும்
படியில்யாம் தள்ளுண்ட நிலையிலும் கருணையாற்
பரிந்தெமைக் குணமாக்கியே

தந்தனை சுகநிலை இச்செயற் கியாம்செயும்
தகுந்தகைம் மாறுமுளதோ
தகைசார்ந்த பல்வரம் தந்தெமை இரட்சிக்கத்
தருணமிது வாகுமன்றோ

மந்தையா மெங்களை நன்மேய்ப்ப ராகியே
மலிந்தபுல் லதனில்மேய்த்தும்
மடுநீ ரருத்தியும் சீவதரு நிழலில்
மன்னவைக் கின்றகோவே

சிந்தையிற் பேரன்பு கொண்டொளிர் எழிற்சிறுவ
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கியொளிர் பரநிலை முதற்குரவ
சிறுபறை முழக்கியருளே.

## 88

உய்கின்ற வண்ணமே உமதுமொழி யருளமுதம்
உண்கின்ற சீடராகி
உற்றபன் னிருவரில் நஞ்சனைய வஞ்சமிகும்
ஒருவனும் யூதாசனை

பெய்கின்ற வன்பினுற் குழுவினில் நீக்காது
பெரிதவனை விட்டுவைத்தே
பிதாவின் திருச்சித்தம் நிறைவேற வேண்டியே
பின்வரு வனவுணர்ந்தீர்

வெய்யலகை பிரபஞ்சத் தேவனின் தளைப்பட்ட
வீணரெம் இழிவுணர்ந்தும்
விலக்கிடா வாறெமை யும்மில் இணைத்தருளும்
விமலதிரித் துவஏகமே

செய்கின்ற செயல்வல்ல இறைமைந்த கர்த்தரே
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கியொளிர் பரநிலே முதற்குரவ
சிறுபறை முழக்கியருளே.

## 89

மனத்தினிற் பேராசை வஞ்சனை பொய்களவு
மற்றவர் மனைவிரும்பல்
மாற்றமார் வஞ்சகப் பொய்க்குணம் நிறைந்தென்றும்
மலிந்ததீ வினைபுரிந்தோம்

தினமுமெம் மீட்பினைக் கருதியே மனுவுருவில்
திருப்பிறவி எடுத்துவந்தே
திகழ்பாவச் சேற்றினில் எடுத்தெமக் கருள்புரியும்
தீனகா ருண்யதேவே

கனமகிமை துதிபுகழ்க் குரிமையுற் றொளிர்தந்தை
கருத்தினை முடிக்குமாறே
காண்கின்ற வடிவெழிற் குறுநடை யமுதமே
கனிதருஞ் சீவதருவே

சினமுத லகற்றியொளிர் தேவனுர் இளவலே
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கியொளிர் பரநிலே முதற்குரவ
சிறுபறை முழக்கியருளே.

## 90

உண்ணிலவு தீக்காமம் வஞ்சகம் பொய்களவு
உலகப் பொருளிலாசை
ஓங்கிய மேட்டிமை அருவயை குரோதமுதல்
உற்றபல தீமைநீக்கி

மண்ணுலகில் உமைநோக்கித் திரும்பினவர் உள்ளத்தில்
மகிமையுடன் வீற்றிருந்து
மாருத அன்பினைப் பொழிந்துவினை பாவங்கள்
மன்னித்த அருள் வெள்ளமே

விண்ணிலவு இறைமக்கள் எனச்சொலும் நிலைதந்து
வேண்டுந் திருமுழுக்கினால்
விளங்குந் திருச்சபையில் திருப்பந்தி பங்குபெற
விதிமுறை வகுத்தவரசே

தெண்ணிலவு வாண்முகத் தேவஇறை மதலையே
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கியொளிர் பரநிலை முதற்குரவ
சிறுபறை முழக்கியருளே

## 91

பத்தியுடன் வழிபடுதல் என்றென்றும் செய்கின்ற
பரதேவன் ஆலயத்தை
பணத்தாசை கொண்டவர்கள் வாணிபத் தலமாய்ப்
பயன்படுத் தினமைகண்டு

சித்தம் வெகுண்டவரை நோக்கியிவ் வாலயம்
செய்வழிபாட் டிற்கேயெனும்
சீர்வசனம் எழுதியிருப் பதைச்சுட்டிக் காண்பித்து
செய்துளீர் மிகுதிருத்தம்

வித்தகத் திருமறை வசனமாம் உணவினை
வேளைதேர்ந் தெமக்கருத்தி
விசுவாச திருச்சபை சேர்த்தருள் இளவலே
விரும்பியுமை நம்பியேற்றோர்

சித்தமிசை குடிகொண்ட இறைமைந்த செல்வமே
சிறுபறை முழக்கியருளே
செழுமறை முழக்கியொளிர் பரநிலை முதற்குரவ
சிறுபறை முழக்கியருளே.

# 10. சிறுதேர்ப் பருவம்

## 92

கொழித்தபன் மணிகளைத் திரைகரத் தாலள்ளிக்
    குறையிர வலர்க்கீந்திடும்
  குளிர்புனல் யோர்தான் நதியில்யோ வானிடம்
    குறித்ததிரு முழுக்கேற்கவே

வழுத்துதற் குரியராம் இறைதந்தை மைந்தரென
    வானெழும் உரையுணர்த்த
  வல்லபரி சுத்தாவி வெள்ளுருவி லும்மீது
    வந்தே யிறங்கிநிறைய

தழைக்குங் கிறித்தவர் திருமுழுக் கவசியந்
    தனையுணர்ந் தேற்கவைத்தீர்
  தரணியர்க் குரைத்ததைத் தம்வாழ்வில் கைக்கொண்ட
    தண்ணருட் செயல்வல்லவா

செழித்தோங்கு பெத்தலேயி லுதித்துவளர் இளவலே
    சிறுதேர் உருட்டியருளே
  சீரார்ந்த கலிலேய நசரேயச் செல்வமே
    சிறுதேர் உருட்டியருளே.

## 93

பொங்குவெஞ் சினவஞ்சப் பொல்லாங்கன் சோதிக்கப்
    போவென் றதட்டிவெல்லும்
  பொன்னகர்த் தந்தையின் அதிகாரம் பெற்றிந்த
    புவியினில் உதித்தமைந்தே

துங்குமிகு விசுவாசத் திருச்சபைத் தலையாகி
    துலங்கவெமை சேரவைத்தே
  தூமறை யுணவினுல் ஆவியை வளர்த்தருளும்
    தூயதிரித் துவஏகமே

மங்குதலும் தோற்றமும் முடிவுமில் லாதொளிர்
மாசோதி விளக்காகியெம்
மனவிருள் துமித்தாங் கொளிநிலவ வைத்திடும்
மகிமைவிண் ணகர்க்கொற்றவா

திங்களின் எழின்முகத் திறைமைந்த தூயவா
சிறுதேர் உருட்டியருளே
சீரார்ந்த கலிலேய நகரேயச் செல்வமே
சிறுதேர் உருட்டியருளே.

## 94

பண்ணிறை இசையெனவும் பாட்டுறும் பொருளெனவும்
பாரெலாம் நிறைந்தியக்கும்
பரநிலைக் கடவுளே உலகுளோர் மீட்புறப்
பரந்தகா ருண்யநிதியே

மண்ணினில் மனுவுரு வெடுத்தெமைப் போல்வந்த
மகிமைநிறை வுற்றமதலாய்
மனிதரெம் மேல்வைத்த பேரன்பின் செயலுக்கு
மகிதலத் தெல்லையுளதோ

கண்ணினில் விழியாகி யுமதுகைப் பொருளெழில்
காண்பிக்கும் நல்லுதவியே
கருத்துடன் முழங்காற் படியிட்டு செபிப்பவர்
கருத்தெலாம் நிறைந்தவினியாய்

தெண்ணிலவு மறையினுட் பொருளாகி நிலைத்தவா
சிறுதேர் உருட்டியருளே
சீரார்ந்த கலிலேய நசரேயச் செல்வமே
சிறுதேர் உருட்டியருளே.

## 95

சிங்கமாய்க் கர்ச்சித்து விழுங்கயார் உளரெனச்
சீறியே சினந்துநிற்கும்
தீயவல் லலகையொடு போராடி நிற்குநாள்
செய்வதறி யாதுநிற்ப

## 69

துங்குபே ரன்பினுல் அலகைக் கொடிவீழ்த்தி
தடிந்துபெரு வெற்றிநல்கும்
தழைத்ததாம் வலிமைசேர் சேனைத் தலைவரே
தண்ணருளின் மெய்யின்பமே

எங்கெங்கும் நிறைந்தவுமை ஏற்பவர் மறுபிறப்
பெய்தவும் அவருள்நின்றே
இனியகனி தரும்வாழ்வில் வாழவைத் தருள்கின்ற
இறைமைந்த பரமநிதியே

சிங்கார மாளிகையின் ஆவிமண வாளரே
சிறுதேர் உருட்டியருளே
சீரார்ந்த கலிலேய நசரேயச் செல்வமே
சிறுதேர் உருட்டியருளே.

## 96

பக்குவம் பாராது பற்பல தொழில்செய்த
பன்னிருவர் தமைத்தெளிந்தே
பரவுலகத் தந்தையின் திருவுளச் சித்தத்தின்
படியவர்க் குரிமையுதவி

திக்கெட்டுஞ் சென்றுமே உலகர்க்குச் சுவிசேடச்
செய்தியை ஐயமின்றித்
தெரியப் படுத்தவும் சாதிகுலம் பாராது
சீடராய்க் கொளவுமெளிதாம்

தக்கசெயல் திருவாய் மலர்ந்துபணி புரிகின்ற
தகுதியும் அளித்துமேலாம்
தண்ணருட் கருணையால் ஆக்கமே நிறைவிக்கும்
தனியன்பு பொழிகொண்டலே

சிக்கென யாம்பற்ற நிற்கின்ற நிலையமே
சிறுதேர் உருட்டியருளே
சீரார்ந்த கலிலேய நசரேயச் செல்வமே
சிறுதேர் உருட்டியருளே.

## 97

குருந்தெனக் கன்னிமரி கருவுற்று நரவுருவங்
கொண்டுமண் ணுலகில்வந்து
கூடுமெய் யன்பினால் எம்பிழை மன்னித்த
குணநலம் மிகுந்த திருவே

திருந்துமுறை யெங்களுக் கேற்றதாம் மெய்நெறி
தெரிவித்த கர்த்தருமை
சிந்தையில் ஏற்கவும் விடுக்கவும் ஆம்சுய
சித்தமே அளித்தவிறையே

கரும்பென வெண்ணியே வேம்புகனி யுட்கொளுங்
காக்கையின் றன்மைபோல
கருத்தினு லென்றென்றும் பொருளாசை யொன்றையே
கருதிடும் பாவவாழ்வில்

திரும்புவார் எவரையும் தள்ளிடா தேற்பவ
சிறுதேர் உருட்டியருளே
சீரார்ந்த கலிலேய நசரேயச் செல்வமே
சிறுதேர் உருட்டியருளே.

## 98

விழவுதிகழ் கானாவூர்க் கலியாண விருந்தினில்
விளைந்தவற் புதம்போலவே
வெறுமையாந் தண்ணீரைப் போலவே இருந்தவெமை
விளங்குங் கனிச்சாறென

எழிலார் நிறத்தையும் இன்சுவையும் நிறைவித்து
யாவர்க்கும் பயன்தருவாய்
இனியன செய்கின்ற வற்புதத் தடையாளம்
இயற்றுசெயல் வல்லமதலாய்

விழுமிய மன்றுாட்டில் இறைவனூர் தொடர்பினை
விளைவிக்கு மெனவுரைதது
விசுவாசி யாவரும் வாழ்க்கையில் கொண்டொழுக
விதிமுறை வகுத்தகுருவே

செழுமையாம் விண்ணரசை அமைக்கின்ற கொற்றவ
சிறுதேர் உருட்டியருளே
சீரார்ந்த கலிலேய நசரேயச் செல்வமே
சிறுதேர் உருட்டியருளே

## 99

உடற்றொழு நோயாளர் துணிச்சட்டை போர்த்ததால்
உற்றநோய் நீங்கிவிடுமோ
உலககர்த் தாவெனும் உமமாலே அந்நோயை
ஒழித்துசுகம் அடைவர்பொற்ப

திடமான நானெனும் அகந்தையால ஆத்துமம்
திகழ்கின்ற பாதகத்தொழுத்
தீநோயை நீதிமான் எனச்சட்டை போர்த்ததால்
தீர்த்திடல் இயல்பதாமோ

உடனுகும் உம்மிடம் பாவத்தை அறிக்கையிட்
டுரியமன் னிப்படைந்தே
உற்றதாம் ஆத்மநோய்ப் பாவத்தில் நீங்கியே
உயர்சுகம் அடைவராமால்

செடகரா யெமையேற்க வந்தஇறை மைந்தரே
சிறுதேர் உருட்டியருளே
சீரார்ந்த கலிலேய நசரேயச் செல்வமே
சிறுதேர் உருட்டியருளே.

## 100

பெறறதம் கைப்பொருள் சிறிதாக வெண்ணியும்
பெறுதபிறர்க் குரியபொருளைப்
பெரிதாக வெண்ணியும் பேராசை நெஞ்சினுல்
பேதையேம் மயங்கிநின்றேம்

உற்றதா யென்றென்றும் அழிவின்றி நல்வரம்
உதவியே துயர்துமிக்கும்
உண்மையாம் மெய்ப்பொருள் உமையன்றி யமையுமோ
உலகெலாம் நிறைந்தபொருளே

முற்றறிவும் பேரின்பும் நீதியும் இரக்கமும்
முதன்மையுங் கொண்டமதலாய்
முழுவதும் நீர்பெருகி எமைச்சிறுக வைத்திடும்
முடிவிலா அன்புநிறைவே

சிற்றறிவில் ஆனந்தம் சேர்க்கின்ற அமுதமே
சிறுதேர் உருட்டியருளே
சீரார்ந்த கலிலேய நசரேயச் செல்வமே
சிறுதேர் உருட்டியருளே.

## 101

வானிலவு பேரின்ப வுலகுசூழ் இறைத்தூதர்
வையகந் தன்னில்வந்து
வள்ளலுந் திருநாமம் முழக்கியே ஓசன்னா
வழங்கித் துதித்துநிற்ப

கானிலவு முல்லைநிலக் கோவலர் குழுமியே
கடவுளிவ ரெனத்தெளிந்து
கர்த்தரே வாழியும் நாமமும் வாழியென
கனிந்துவாழ்த் துரைத்துநிற்ப

வானுலவு கோள்களை ஆய்ந்துணர் கலைஞர்கள்
வானுடுக் கண்டுவந்து
வையகப் பேரரசு பல்லாண்டு வாழ்கவென
வாழ்த்துரை பகர்ந்துநிற்ப

தேனிலவு வண்ணமே நிலம்வந்த மதலையே
சிறுதேர் உருட்டியருளே
சீரார்ந்த கலிலேய நசரேயச் செல்வமே
சிறுதேர் உருட்டியருளே.

—[ முற்றும் ]—

# பாடல் முதற்குறிப்பு


| | பாடல் முதற்குறிப்பு | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அண்டமுதல் | 9 |
| 2 | அரியஞான | 56 |
| 3 | அருவமாய் | 6 |
| 4 | அல்லேலூயா | 41 |
| 5 | அழிக்கவென்றால் | 81 |
| 6 | அள்ளக்குறையா | 47 |
| 7 | ஆறுநாள் தன்னில் | 29 |
| 8 | அன்பே வெண் | 40 |
| 9 | ஆதியின் தந்தை | 1 |
| 10 | ஆவிமணவாட்டி | 84 |
| 11 | இம்பரில் மானிடம் | 18 |
| 12 | இரட்சகர் இயேசு | 13 |
| 13 | இரவடைவை | 25 |
| 14 | இரவலர்க் கருளுவை | 63 |
| 15 | இலகுமெய்த் தேவனின் | 3 |
| 16 | இழிவார் பேயை | 55 |
| 17 | இறைவர் மைந்தர் | 79 |
| 18 | இன்னமுதமொழி | 4 |
| 19 | இன்பு நிறைவின் | 71 |
| 20 | உடற்றெழுநோய் | 99 |
| 21 | உண்ணிலவு | 90 |
| 22 | உண்மை நிலையின் | 50 |
| 23 | உய்ன்கிற நல்லாறு | 14 |
| 24 | உய்கின்ற வண்ணமே | 88 |
| 25 | உலகத் தனைவர் | 42 |
| 26 | உலக மக்கள் | 58 |
| 27 | உறவுகள் அனைத்தில் | 33 |
| 28 | உற்பவ உலகில் | 36 |
| 29 | உற்றதாம் பாதகத் | 70 |
| 30 | எங்கே யெங்கே | 73 |
| 31 | எண்ணம் பேச்சு | 28 |
| 32 | எண்ணூர் சமய | 54 |
| 33 | எழுசுரத் தின்னிசை | 8 |
| 34 | ஏகஇறை | 7 |
| 35 | ஏரார்ந்த உரு | 83 |
| 36 | ஒரு சொல்லதனால் | 68 |
| 37 | ஒரு சொல்லதனால் | 15 |
| 38 | ஒரு நாற்பதுநாள் | 61 |
| 39 | ஒரு பன்னிருவர் | 44 |
| 40 | ஓங்குந் தோணி | 45 |
| 41 | ஓரிறை உண்டென | 86 |
| 42 | கடலெனுந் துன்ப | 85 |
| 43 | கடுங்குளிர் போக்கிட | 21 |
| 44 | கண்டை நிகர்த்த | 25 |
| 45 | கருணாகர வொண் | 22 |
| 46 | கருவே துமிலா | 23 |
| 47 | கற்பணி காரிகை | 19 |
| 48 | கற்பனை பத்தும் | 34 |
| 49 | காமம் வெகுளி | 46 |
| 50 | காலைத்துயிலில் | 78 |
| 51 | காற்றையுங் | 69 |
| 52 | குருந்தெனக் கன்னி | 97 |
| 53 | கூர்த்த மதியால் | 80 |
| 54 | கொடிய பாவக் | 17 |
| 55 | கொழித்த பன்மணி | 92 |
| 56 | சிங்மாய்க் | 95 |
| 57 | சுற்றிக் குழீஇ | 48 |
| 58 | சூதானவையில் | 51 |
| 59 | தவறுகளுடனே | 35 |
| 60 | தன்னிகரில்லாத | 5 |
| 61 | திணியார் கருங்கல் | 26 |
| 62 | தீய பாவம் | 43 |
| 63 | தேய்மதியென | 64 |
| 64 | தேவனின் செப | 11 |

| | பாடல் முதற்குறிப்பு | பாடல் எண் |
|---|---|---|
| 65 | நண்ணுங் காலத் | 60 |
| 66 | நாடிய பொய்மை | 32 |
| 67 | நீதி தூய்மை | 16 |
| 68 | நீராருலகில் | 72 |
| 69 | நெஞ்சினிற் பிற | 38 |
| 70 | பக்குவம் பாராது | 96 |
| 71 | பண்ணிறை இசை | 94 |
| 72 | பதைக்கும் வணமே | 75 |
| 73 | பக்தியுடன் | 91 |
| 74 | பந்தமுறு | 87 |
| 75 | பறந்தோங்கு | 12 |
| 76 | பாரில் ஒளி | 62 |
| 77 | பாவியர் எம்தலை | 20 |
| 78 | பெருகும் புனல் | 50 |
| 79 | பெருகு வெஞ்சின | 93 |
| 80 | பெற்றதம் கைப்பொருள் | 100 |
| 81 | மண்ணாருலகில் | 49 |
| 82 | மழைவர எலியா | 37 |
| 83 | மனத்தினிற் | 89 |
| 84 | மனிதர்கள் பாவத் | 67 |
| 85 | மிகையாகிய | 24 |
| 86 | முந்தைப் பொருட்கும் | 74 |
| 87 | முற்றும் பலவாங் | 77 |
| 88 | மூன்றா யொன்றாய் | 31 |
| 89 | வருத்தும் பாவ | 27 |
| 90 | வளர் விசுவாசம் | 39 |
| 91 | வள்ளலென | 10 |
| 92 | வானிலவு பேரின்ப | 110 |
| 93 | வானில் நிலவும் | 76 |
| 94 | விண்ணாளரசின் | 30 |
| 95 | விண்ணிலவு | 66 |
| 96 | விண்ணுலகின் | 2 |
| 97 | வியப்புக்குரிய | 53 |
| 98 | விரிவின் கிரணத் | 57 |
| 99 | விழவுதிகழ் | 98 |
| 100 | வெறுமைசேர் | 82 |
| 101 | வேதவசனம் | 59 |


## திருப்பெயர் போற்றி

உம்மொழித் திறனால் உயிர்வளர்ந் தோங்கும்
உணவுதான் உம்மிடத் துளதாம்

உம்மிலாத் தூய நம்பிக்கை யொன்றே
உற்றஅவ் வுணவினை அளிக்கும

செம்மனத் துடையீர் சிந்தனை வழியால்
செய்கவென் றெடுத்துரைத் தருளும்

எம்மனம் உருக்கும் இரக்கமார் உருவே
இறைமைசேர் இயேசுவே போற்றி.

—†—

## சிதம்பரம்
## 25, கமலீஸ்வரன் கோயில் தெரு,
## சுவிசேஷ மன்றத்தினர் வாரந்தோறும்
## நடத்திவரும் நிகழ்ச்சி நிரல்.

ஊழியர் சகோதரர் **J. சைமன்** அவர்கள்

ஊழியை சகோதரி **ஜெசி சைமன்** அவர்கள்

---

புதன் - இந்த ஒருநாள் மட்டும் மாதர் நிகழ்ச்சி
மாலை மணி 6-00 முதல் 7-30 வரை

வியாழன் - வேதாகம ஆராய்ச்சி யாவருக்கும்
மாலை மணி 6-30 முதல் 8-00 வரை

வெள்ளி - ஜெபக்கூட்டம்
மாலை மணி 6-30 முதல் 8-00 வரை

ஞாயிறு காலை ஆராதனை
காலை மணி 9-00 முதல் 11-00 வரை

ஞாயிறு மாலை சுவிசேஷக் கூட்டம் (நற்செய்திக் கூட்டம்)
மாலை மணி 6-30 முதல் 8-00 வரை

---

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி :
ஊழியர் சகோதரர் J. சைமன் அவர்கள்
**சுவிசேஷ மன்றம்**
25, கமலீஸ்வரன் கோயில் தெரு,
சிதம்பரம் - 608 001

சபாநாயகம் பிரிண்டர்ஸ், சிதம்பரம். போன்: 2350